In ancient days messages were sent from one king to another through their private messengers. The common people could not even dream of sending communications from one place to another. After some years, letters were sent through messengers called mail runners who still continue in some places. The mail runners had to cross thick forests and face with wild animals, and thieves on their way. Trained pigeons were also used for card letters. To symbolise this, a letter was transmitted by a pigeon on 2nd October 1954, on the eve of the Indian Stamps centinary celebrations.

The next stage of carrying mails on horses was introduced by Shershah in

1540 A.D. Mails used to be carried in carts pulled by a camel and a horse together. Regular post offices were opened in India during the period when Dulhousi was the Viceroy. He ordered that Railways should carry mails. This was an epoch making event in the speeding up of the despatch of mails.

The first Indian Postage stamp was printed in 1854. From then onwards stamps of various denominations have been introduced. It will really be a worthy job for the philatelist to collect the series of Postage stamps issued from then onwards.

In later years the post offices took up the despatch of valuable articles through insurance and the transit of money through money-orders. The post office does banking business also. The post office Savings bank is the most secure of all banks.

Very expeditious despatch of mails has now been made possible through aeroplanes. The routine items of work such as affixing stamps etc., have been mechanised in big post offices to save time.

The postal department has also got the telegraphs, wireless, telephones and television as its branches. The postal department is doing the greatest service to the people of the country.

Letters are carried to places thousands of miles away for very small charges. The post office supplies quinine tablets to the people suffering from malaria in the remote and interior parts of the country. News papers are carried to all places by the post office.

The progress of the post offices after the independence is very remarkable. The number of post offices at present is more numerous than before independence. The Government have now planned to provide post offices for all places having a population of 1000 and more. Carriage of mails, helicopters to hilly places inaccessible by trains and motor is under contemplation. The postal insurance scheme has immensely benefited the working classes. Mobile postal units go to all parts in big cities in the evenings on all days including holidays. The telephones and telegraph are at the service of the people day and night.

The telegraph helps people to send messages quickly. The telephones are of every day use for all people, especially business men. Many lakhs worth of orders are booked by trunk calls. People of one country and another country overseas, thousands of miles away contact each other through telephones. This helps very much in unifying nations. Police and armed forces are no where without telephones.

The Indian stamp centenary was celebrated on a grand scale on October 2nd 1954. An International Philatelic exhibition was held at New Delhi in this connection. The Indian postage stamps have been issued from time to time to mark important events such as the attainment of independence, birth of the republic of India, the birth day of the father of the nation, and the centenary celebrations of the Indian Railways and the telegraphs and stamps. A series of stamps have been issued depicting the historic places of interest in India. Our great poets and Gods also have been included in the series of stamps.

Thus the post office has become an essential feature in the day to-day life of the country men.

S. SARADA,
VI Form, B



CONNEMARA PUBLIC LIBRARY
25 NOV 1955
MADRAS

THOSE WHO WORKED FOR THE HOSTEL

OUR BENEFIT ARTISTES

CONNEMARA PUBLIC LIBRARY
25 NOV 1956
MADRAS



T. K. S. BROTHERS

Sri M. L. Vasanthakumari

Sri K. B. Sundarambal

25 NOV 1956
MADRAS

TRAVANCORE SISTERS

KUMARI VIJAYALAKSHMI
(who collected most by selling brick-squares)



OUR HIGH SCHOOL TODAY

Srimathi (Kumari) KAMALA LAXMAN,
who has solely contributed the Dining Hall.

BALA GANGADHAR TILAK

Tilak was born in July 1856 at Ratnagiri in the Bombay Presidency. He was a Maharathi Brahmin. He passed his B.A. from the Deccan College at Poona. Later he took his degree of law. He lost his parents early in life and married a poor girl, Satyabama by name.

He did social service and started a new English School. He founded the Deccan Educational Society and the Ferguson College in Poona. He also founded the "Kesari" a Maharathi daily newspaper and the "Maharathi," a weekly in English.

He fought with the British Government for the cause of India's freedom. He has courted imprisonment several times. His greatest contribution was to the political life of India. His literary works have contributed much towards the increase of knowledge. As a journalist he did much to bring about a unity amongst the Maharathis.

Tilak possessed an ideal character. He was devoted to religion and God. He was full of courage and had a strong personality. His heart was full of kindness. His love for his motherland was unbounded and he considered no sacrifice too great for his country.

Tilak was a great man and one of the greatest leaders of India. He was a real patriot and a born politician. He was known as "Lokamanya", meaning one respected by the world. He was a co-ordination of all that was good by being a great educationist, scholar, speaker, journalist, religious man, reformer, politician, patriot, a leader and a martyr!

C. S. VISALAKSHI,

V Form, A.

"IN A MINUTE"

If you ask Kamala to do anything, she would reply "in a minute." It was a bad habit she had.

"Kamala, please bring me a cup of water."

"In a minute".

"Kamala, go upstairs and bring me down my comb."

"Yes, mother, in a minute"

"Kamala, come to your dinner."

"Yes, mother, in a minute."

One day her pet parrot was hopping about on the floor. Somebody went out, leaving the door open, just as "somebody" is always doing. Kamala's mother said, "Kamala, shut the door, or the cat will be after your parrot." As usual Kamala said "yes, mother, in a minute. I just want to finish this line in my drawing." But the cat did not wait till she finished her drawing. In he popped, and with one dart he had the parrot in his mouth.

Down went the slate on the floor and away went the cat, parrot and Kamala. There was a wild chase on the lawn. In a minute Kamala came back weeping, with the poor parrot in her hand; but, oh! the life had all been shaken out of him.

How Kamala cried! Mamma was sorry for her, but said, "A great many things may happen 'In a minute,' Kamala. I hope the next time you are told to do a thing, you will do it at once."

It was a hard lesson for Kamala to learn. Very hard. But it was good for her. Never again did she hesitate to do a thing in time.

K. RANGANAYAKI,

III Form, B.

WHO AM I?

I am a five lettered word.
My first is in Donkey but not in Monkey,
My second is in evening but not in morning,
My third is in long but not in short,
My fourth is in heat but not in eat,
My fifth is in paint and also in saint.
Who am I? [Delhi]

I am a five letteredword.
My first is in hair but not in hear,
My second is in not but not in cot,
My third is in deep but not in heap,
My fourth is in inch but not in punch,
My fifth is in apple and also in air.
Who am I? [India]

I am a four lettered word
My first is in swan but not in fawn,
My second is in oil and also in boil,
My third is in agent and also in pageant,
My fourth is in pot but not in hot,
I am a thing that you use.
Who am I? [Soap]

S. SIVAGAMI,
IV Form, E.

I am a word of seven letters.
My first three letters are a double digit,
Any my last four letters are melodious,
I am a famous mountaineer.
Who am I? [Tensing]

I have a head but I am not a creature,
I am not an animal though there are three lines on me,
I sound when I am made of metal.
But not when I am made of paper.
Who am I? [Rupee]

S. SAKKUBAI,
V Form, B.

SERVED HIM RIGHT

A miser having lost a bag containing one hundred rupees, promised ten rupees reward for its recovery. This was claimed by a poor man who found the treasure, and returned it honestly; but the mean old miser tried to cheat him out of the reward by saying that the bag really contained one hundred and ten rupees when he lost it.

The honest finder appealed to the judge for assistance, and the matter came up for trial.

It was seen that the bag had not been opened, by the state of the seal. Now, however, it was opened and the money counted out in the court. "you say", said the judge, "that the bag you lost contained one hundred and ten rupees?"

"Yes, your honour", replied the miser.

"Then, as this one, contains one hundred rupees only, it cannot be yours. This honest fellow must keep it until the real owner appears; and you must pay all the expenses of this trial.

Thus the miser was paid in his own coin.

K. Bama,
III Form, B.

LAUGH A WHILE !

A. Punctuations—Take care of them :

1. King Charles the First walked and talked half an hour after his head was cut off.

2. Arvind says Sunithi is a donkey.

(1) Put a semicolon after talked and a comma following the word after and the meaning is plain).

(2) The author is not crazy if you put a comma after the first noun).

B. Scholars have no sense—an illustration :

Once upon a time there were four friends. Three of them were great scholars but had no commonsense. The fourth was not a scholar but had wonderful sense. The first three despised the fourth, but, for old time sake they held together.

Nearing a forest they found the bones of a dead lion. One of the first three exclaimed, "Here we are with something to test our scholarship on. Let us prove our worth in bringing the lion to life."

The anatomist among them made a perfect job of the skeleton. A composite structure was obtained. The biologist provided the flesh, blood and skin. Then came the time of the chemist, the third man, who gave the lion the breath of life and he was on the point of doing so when the fourth man of commonsense jumped on him saying, "What! If you give life to the dead lion he would kill us all." 'Quiet! You idiot. You do not know the fulfilment in knowledge", the others said and proceeded with their efforts.

Meantime what of our man of sense? He quietly climbed a tall tree and watched. The lion was brought to life and lo! the lion rose, roared and killed all the three. The man of sense was right.

C. Samuel Taylor Coloridge wrote :

Water, water, everywhere,
And all the boards did shrink
Water, water everywhere
Not a drop to drink.

Now, here is a student who appeared for an examination. He looks through the paper as soon as the results are published and his number is not there. This is how he exclaims:

Numbers, numbers everywhere.
But not my number anywhere!

E. Imitation which ended in reality!

The master of a pup of a very good breed wanted to train it in such a way that it could bark when it was hungry and needed food. What he did was this:

"He brought a plate of food, kept it before the puppy and to induce it to bark, he barked and then gave the food. He repeated this for several days, and then he expected the pup to bark when it needed food. Unfortunately what happened was the pup would not take the food until the master barked!

F. Practice makes a man perfect!

People insist on speaking the plain and dull truth in places like court when a witness is required to take an oath that "he will speak the truth, the whole truth, and nothing but the truth."

A judge once went to a dentist for the extraction of a tooth. Before the dentist began his operation, the judge told him solemnly. "You pull out the tooth, the whole tooth and nothing but the tooth."

G. Implicit obedience—where and when?

Standing up on the bench as a form of punishment, ends with school. Apart from the teacher there is only one other person whom you willingly obey. When he does say to you to stand up on the bench, even elderly people readily obey. Can you guess? It is the photographer, who, while taking group photos has to ask people in the back rows to climb up benches. Young and old, grey haired or bald headed, all fall in line.

Collected by: D. LALITHA,
IV Form, A.

WISE SAYINGS

There is nothing ugly in the world: It is our mind that makes things ugly. Even ugly things have their share of beauty, if only we would see.

* * *

Some one asks us to do something which we think either bad, or, if it is good, it is not in our power to do it, we do not like to displease him. So, not having the decision of character to say 'No', we say 'Yes', and we make cowards of ourselves.

* * *

Do not wound others by exposing their secret faults. Do not tease them by speaking of their sins. Do not name to them their defects and say to them they are bad.

* * *

He who speaks of things that do not concern him, shall hear of things that will not please him.

* * *

Do not make yourself familiar with all sorts of people. The way to live happily is to keep your mind to yourself, and not to tell your thoughts freely to others.

(Extracts from Arabian Nights)

Collected by: R. BHANUMATHI,
VI Form, C.

Our new Headmistress.
(Miss. A. MEENAKSHI)



Our President blesses our new Headmistress.

☆



Our new Headmistress
with the Secretary and the Staff



Dr. HARRY EDGREN of America
addressed the joint conferences of teachers, 1954



Dr. R. K. BHAN, Special Officer to the Educative Ministry of the Central Government visits our School

Sri K. KAMARAJA NADAR on the Founder's Day 1954

CONNEMARA PUBLIC LIBRARY
25 NOV 1956
MADRAS

Sri K. KAMARAJA NADAR and Sri KALKI, on the Founder's Day '54



The D. P. I. participating in the Sports Day Celebrations

* சென்னைக் கடற்கரை

பரப்பில் பெரியதும், பார்வைக்கெளியதும் அழகிற்குகந்ததுமான சென்னைக் கடற்கரை உலகிலேயே தன் அழகினால் இரண்டாவது ஸ்தானம் வகிக்கிறது. சென்னைத் துறைமுகத்திலிருந்து அடையாறுவரை பரவியுள்ளது சென்னைக் கடற்கரை.

ஒவ்வொரு சிறுவனையும், சிறுமியையும் தன் அருகிலோ, கரையிலோ விளையாடச் செய்கின்ற ஒரு வசிகரத்தன்மை சென்னைக் கடற்கரைக்கு இருக்கின்றது. இல்லாவிடில், ஒவ்வொரு குழந்தையும் மாலை வேளைகளில் கடற்கரைக்குச் செல்லவேண்டும் என்று ஏன் பிடிவாதம் செய்கிறது ? ஒவ்வொரு சமயம் சிறுவர் மட்டுமன்றிப் பெரியவர்களும் கூட, கடற்கரைக்குச் செல்லவேண்டும் என்று ஆசைப்படுகின்றனர். சென்னைக் கடற்கரையைக் காணவேண்டும் என்ற ஆவலுடன், மக்கள் தங்கள் வீட்டிற்கும் கடற்கரைக்கும் உள்ள அதிக தூரத்தையும் மறந்து நடந்து வருகின்றனர். இதுவே, தன் வீட்டுவேலையாக அதில் பாதியளவே தூரமுள்ள ஒரு இடத்திற்குச் சென்று வாச் சொன்னால் அவர்கள், "காலை வலிக்கிறது. மருந்து கொண்டுவா" என்கின்றனர். சிலர் வாகனத்திற்காக ஏற்படும் செலவையும் மறந்து இங்கு வருகின்றனர். இதிலிருந்து அதன் எழில் புலப்படுகின்றதன்றோ !

எத்தனை கூட்டம் வந்தாலும் தாங்கிக் கொள்ளும்படியான மிகப் பெரிய மணற்பரப்பு; அதை அடுத்து நீல நிறமுடைய கடல். ஒவ்வொரு அலையும் எவ்வளவு அழகாக, எவ்வளவு உயரம எழுகிறது என்பதை எந்தக் கவியாலும் வர்ணிக்க இயலாது. கடலில் மிதந்து கொண்டிருக்கும் கப்பலையும், படகுகளையும் ஒரு கவி வானததில் பவனிவரும் சந்திரனுக்கும், நட்சத்திரங்களுக்கும் ஒப்பிட்டுப் பாடியிருக்கிறார். பௌர்ணமி தினத்தன்று அந்தி வேளையில் சந்திரன் உதயமாவதையும், அவன் பவனி வரும் கோலத்தையும் இக்கடலில் பார்த்தால் ஒரு வெள்ளி ஓடமானது, இதில் மிதந்து செல்கிறது எனத் தோன்றுகிறது. அவன் தன் வெண்மையான ஒளியை வீசுவதனால் இக்கடற்கரை மேலும் அழகாகக் காட்சியளிக்கிறது. இதைக் காணவரும் மக்களின் தொகை அளவிடற்கரியது.

இவ்வளவு இயற்கையழகும் தன்னகத்தே கொண்ட இக் கடற்கரையின் எழிலைச் செயற்கையழகும் சேர்ந்து வனப்பு மிகுந்ததாகக் காட்சியளிக்கச் செய்கிறது. மணற் பரப்பின் மத்தியில் ரேடியோ ஒலிபரப்பும் கருவி ஒன்று வைக்கப்பட்டிருக்கிறது. அதன் அருகில் ஒரு மேடையும் கட்டி, மக்கள் உட்கார வசதி செய்யப்பட்டிருக்கிறது.

சேப்பாக்கம், திருவல்லிக்கேணி, மயிலாப்பூர்ப் பகுதிகளில் கடலை அடுத்து மேடைகள் கட்டி, அவற்றில் நகரசபையார் 'பாண்டு' வாத்தியகோஷ்டி இன்னிசையை இசைத்து மக்களை மகிழ்விக்கச் செய்திருக்கின்றனர். மக்கள் நீந்துவதற்குப் பழகிக்கொள்ளும் நீச்சுத் தடாகம் ஒன்று திருவல்லிக்கேணியில் அமைக்கப்பட்டிருக்கிறது. அதற்கருகில் பல்வகையான மீன்களைக்கொண்ட ஒரு காட்சிச்சாலை இருக்கிறது. அதையடுத்துக் குழந்தைகள் விளையாடுவதற்கான விளையாட்டுக் கருவிகளோடு ஒரு இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அங்குள்ள ஊஞ்சல், குதிரை, போன்ற பல விளையாட்டுக்கருவிகள் சிறுவர்களை மகிழ்விப்பனவாகும்.

சென்னைக் கடற்கரையை ஒட்டிச்செல்லும் முதற்சாலையின் ஒரு பக்கத்தில் சென்னைத் துறைமுகம், பல்கலைக்கழகம், அதனைச் சேர்ந்த புத்தக நிலையம், கழக அங்கத்தினர் கூடும் இடம், சென்னை அரசாங்கக் காரியாலயங்கள், பிரஸிடென்ஸி கல்லூரி, லேடி வெலிங்டன் கல்லூரி, ராணி மேரி கல்லூரி, செட்டிநாட்டு அரசரின் அரண்மனை, கலா க்ஷேத்திரக் கட்டிடங்கள் இருக்கின்றன. கடற்கரைக்கு வரும் மக்கள் இவற்றையும் மிக்க ஆர்வத்தோடு பார்வையிடுகின்றனர். மேலே குறிக்கபபட்ட புத்தக நிலையத்திற்கு அருகில் 'இரும்புப் பாலம்' என்றழைக்கப்படும் ஒரு பாலம் இருக்கிறது. அவ்விடத்திற்கு அருகில் 'கூவம்' என்னும் ஆறு கடலில் கலக்கிறது. அந்தச் சாலையின் மறுபுறம், அதாவது இப் பெரிய கட்டிடங்களின் எதிரில் அழகிய மலர்ச்செடிகள் —ஒரே அளவு அகலமுள்ளனவகளாகவும், தொடர்ச்சியாகவும் சாலையின் கூடவே செல்கிறது. அவற்றின் உயரம் எப்பொழுதும் ஒரே அளவாக இருக்குமாறு கத்தரிக்

* ஐந்தாம் பாரக் கட்டுரைப் போட்டியில் முதற்பரிசு பெற்றது.

கின்றனர். வரிசையாக மின்சார விளக்குகளும் குறிப்பிட்ட தூரத்திற்கொன்றாக வைக்கப்பட்டுள்ளன. இவை அக்கடற்கரையின் அழகை மேன்மேலும் அதிகரிக்கச் செய்கின்றன.

கண்களுக்கு விருந்தாக அமைந்த இக் கடற்கரை, ஏழைகள் தங்கள் பொருள்களை விற்று ஊதியம் பெறவும் வசதி அளிக்கிறது. விசேஷ தினங்களில் மக்கள் இங்கு வந்து நீராடியும் செல்வர். செம்படவர்களுக்கும் மீன் பிடிக்கும் வசதியளிக்கிறது.

இத்தனையும் தன்னகத்தே கொண்ட இக் கடற்கரை மக்களின் மனத்தையும் கொள்ளை கொண்டு விடுவதில் வியப்பிற்கு இடமேது!

S. ஜானகி,
ஆறும் படிவம், 'ஆ' பிரிவு.

---

* மாணவர் கடமை

சுதந்திர நாடாகிய நம் அருமைத் தமிழ் நாட்டை முன்னேற்றும் பொறுப்பு வருங்கால இளஞர்களாகிய மாணவர்களிடமே உள்ளது. 'மாணவர்கள்' என்பது ஆண் சாரரை மட்டும் குறிப்பது அன்று; தமிழ்நாட்டின் செல்வம் போன்ற, விலை மதிக்க முடியா இரத்தினங்கள் போன்ற பெண்களையும் சேர்த்துத்தான் மாணவர்கள் எனும் சொல் உபயோகப்படுத்தப் படுகிறது. நம் நாடு சிறந்த நாடு என்று பெயர் பெறுவது மாணவர்களால்தான். இத்தகைய அரிய பொறுப்பு மாணவர்களிடமே இருப்பதால் மாணவர்கள் தாங்கள் கடைப்பிடித்தொழுகவேண்டிய கடமைகளின்படி சரிவர நடந்தால் நம் தாய்நாடு ஓர் சிறந்த நாடாக விளங்கும் என்பதில் யாதொரு ஐயமுமில்லை.

மாணவர்கள் ஓர் விலைமதிப்பற்ற இரத்தினமாக, ஓர் அரிய பொக்கிஷமாகத் திகழ வேண்டுமென்றால் அவர்கள் கடைபபிடிக்கவேண்டிய கடமைகள் பல உள. முதலில் மாணவர் கடைப்பிடிக்க வேண்டியது சிறந்த ஒழுக்கம்.

"நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம்; தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும்"

என்னும் தெய்வப் புலவரது திருவாக்கு யாவரும் அறிந்ததே.

"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்"

என்பது பொய்யா மொழியன்றோ! மாணவர்கள் ஒழுக்கத்தைக் கடைப்பிடித்தால் அவர்கள் எல்லோரினும் மிகச் சிறந்தவராகக் கருதப்படுவர்.

அடுத்தபடியாக, மாணவர்கள் அடக்கத்தோடு நடத்தல் வேண்டும். அடக்கம் உள்ளவரைச் சான்றோர் அமரராகக் கருதுவர். இதனையே "அடக்கம் அமரருள் உய்க்கும்; அடங்காமை ஆரிருள் உய்த்துவிடும்" என்னும் குறள் அறிவுறுத்துகிறது. அடக்கத்தோடு அமைந்து, அதனொடு ஒழுக்கமும் இருந்தால் அவர்களைக் கற்றறிந்தோர் உயர்ந்தவராகக் கருதமாட்டாரோ!

இன்னும் மாணவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய கடமைகளுள் மிகவும் முக்கியமானது வாய்மை. மற்றும் புறங்கூறாமை, பெரியோர்களிடத்தில் பணிவாக நடந்து கொள்ளுதல், கர்வமின்மை, ஆபத்தில் உதவி செய்தல், செய்ந்நன்றியறிதல் ஆகியவைகளும் முக்கியமானவைகளே. மாணவர்கள் இவற்றைச் சிறுவயதிலிருந்தே கற்கவேண்டும். "ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமோ" என்ற பழமொழி உண்மையானதே. சிறுவயதிலிருந்தே மாணவர்கள் மேற்கூறிய கடமைகளைக் கடைப்பிடித்தால் அவர்கள் பெரியோராகும் போது பொன்போல் போற்றப்படுவர்.

பள்ளியில் படிக்கும் மாணவர்களிடம் பல குற்றங்கள் காணப்படுகின்றன. ஆசிரியர்களிடத்தில் ஒழுக்கமின்றி நடந்துகொள்ளுதல், கீழ்ப்படியாமை, பிறரிடத்தில் வெகுண்டு பேசுதல், அடக்கமின்மை, ஒழுக்கமின்மை போன்ற தீக்குணங்களும் உள்ளன. இவற்றை மாணவர் விலக்கவேண்டும்.

---

* நாலாம் பாரக் கட்டுரைப் போட்டியில் முதற் பரிசுபெற்ற கட்டுரை.

மாணவர்கள் செய்ந்நன்றியறிவுடையராக வேண்டும். "எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்; உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு" என்பது பொன்மொழியல்லவா! மாணவர்களிடத்து அமைந்துள்ள மற்றொரு தீய குணம் புறங்கூறுதலாகும். "புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலின் சாதல், அறங் கூறும் ஆக்கம் தரும்" என்பது திருவள்ளுவரது வாக்கு! ஒருவர் இல்லாத சமயத்தில் அவரைப்பற்றி மற்றொருவரிடம் புறங்கூறி வாழ்தலைவிட இறந்துவிடல் நல்லது என்பது தருமநூல்கள் கூறும் நீதியாகும். ஆகையால் புறங்கூறுதல் எத்தன்மையானது என்பதை மாணவர் அறியவேண்டும். இன்னும் மாணவர்கள் அறியவேண்டிய கடமைகள் பல உள.

மாணவர்கள் வருங்காலச் செல்வர்களாதலின் மேற்கூறிய கடமைகளைக் கடைப்பிடிப்பார்களேயானால் அவர்கள் சிறந்த பயனை அடைவர். அவர்களது சிறந்த குண நலன்களே அவரைப் பரிசிற்குரியவராக்கும். ஒழுக்கத்திற்காகவும், வாய்மைக்காகவும், மற்றும் சில அரிய குணங்கட்காகவும் பரிசில் பெற்ற மாணவர்கள் எத்தனைபேர்தான் உளர்! சிறந்த குணங்கள் அரிய பயனை நல்கியே தீரும். இவ்வாறு பரிசில்களையும், சிறந்த பயனையும் பெற்றவர்கள் எண்ணிலர். அரிய குணங்களையே பொக்கிஷமாகக் கொண்டுள்ளது நம் தமிழ்த் திருநாடு. நாட்டுப் பற்றின் மூலம், தேசப் பணியின் மூலம் நமது மகாத்மா சுதந்திரத்தை வாங்கிக் கொடுத்ததால் அவரை நம் தாய்நாட்டின் தந்தையென்று வழங்குகிறோமன்றோ!

'நாடு முன்னேறுவது மாணவர்களாகிய எங்களிடந்தான் உள்ளது' என்று மாணவர்கள் வீரமுழக்கம் செய்தால் மட்டும் போதாது; செய்கைமுறையில் காட்டவேண்டும். கடைப்பிடிக்கவேண்டிய முறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும். கடமைகள் மிகப்பலவாயினும் அவற்றுள் சிலவற்றையேனும் கடைப்பிடிக்க வேண்டும். 'நாடு முன்னேறவேண்டும்' என்னும் அவா மாணவர்கள்பால் இருந்தால் மட்டும் போதாது. கடமைகளையும் மறக்கக் கூடாது. ஆகையால் மாணவர்கள் தங்கள் கடமைகளை நன்கு அறிந்து அவற்றின்படி நடக்கும்படி சிறந்த அறிவை அவர்கட்கு அளிக்கவேண்டுமென்று எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்துக் கொள்ளுவோமாக!

ந. சரோஜா,
ஐந்தாம் படிவம், 'ஆ' பிரிவு.

---

* நீதி காத்த மன்னன்

பல வருஷங்களுக்கு முன் நம் நாட்டை ஓர் அரசன் ஆண்டுவந்தான். அவன் அறிவிற் சிறந்தவன்; குடிகளின் நன்மையையே நோக்குபவன். பல கற்றறிந்த புலவர்கள் அவனது சபையை அலங்கரித்தனர். நாள்தோறும் பல பாவலர்கள் அவன் சபைக்கு வந்து பல பாடல்களைப் பாடிப் பரிசில் வாங்கிச்செல்வர். அந்நாட்டில் குடிகள் மிகவும் சௌக்கியமாக வாழ்ந்து வந்தனர். என்றும் திருடர்கள் பயமே இல்லை. அரசன் நீதி தவறாதவனாய் இருந்ததனால் குடிகள் அவனைத் தெய்வமாகப் போற்றி வந்தனர்.

இத்தகைய மன்னனுக்கு ஒரு மகன் பிறந்தான். அரசனுக்குப் பெருமகிழ்ச்சி உண்டாகியது. மக்கள் ஆனந்தக் கடலில் மூழ்கினர். அக்குழந்தை மிகவும் போற்றி வளர்க்கப்பட்டது. வயது வளர வளர அரசகுமாரனுக்குப் பல கலைகளைக் கற்பித்தனர். அவனும் நன்றாகக் கவனித்து எல்லாச் சாஸ்திரங்களையும் கலைகளையும் கற்றுக்கொண்டான். அவனுக்கு வில்வித்தையும், கத்திச் சண்டையும் கற்றுக் கொடுத்தனர். அவற்றையும் அவன் கற்று யாவரினும் வல்லவனாய்ச் சிறந்து விளங்கினான். குடிகள் அரசனைப்போல் மகனும் இருந்ததைக் கண்டு சந்தோஷம் அடைந்தனர்.

அவன் தேரை ஓட்டவும் கற்றுக் கொண்டிருந்தான். அவன் சிறிது நேரத்தையும் வீணாக்காமல் எந்தக் காரியத்தையாவது செய்துகொண்டே இருப்பான். அவனும் தகப்பனைப்போல் பல நீதி நூல்களைக் கற்று

---

* மூன்றாம் பாரக் கட்டுரைப் போட்டியில் முதற் பரிசுபெற்றது.

அதன்படி ஒழுகி வந்தான். எல்லோரும் அவன்மீது அன்பும் மதிப்பும் கொண்டனர்.

தினந்தோறும் அவன் ஊரைச் சுற்றிப் பார்ப்பதற்காகத் தானே தேரையோட்டிக் கொண்டு செல்வான். அங்கு யாராவது வறுமையால் வாடினால் அவர்களுக்கு உதவி புரிவான்; நோயினால் துன்பப்படுபவர்களுக்கு உதவி புரிந்து அவர்களைக் காப்பாற்றுவான்; குற்றவாளிகள் இருந்தால் அவர்களை நல்வழிப் படுத்துவான். இவனுடைய செயலைக் கண்டு யாவரும் வியந்தனர்.

ஒருநாள் இவன் வழக்கம்போல் தேரை ஓட்டிக்கொண்டு ஊரைப் பார்க்கச் சென்றான். போகும்போது வேகமாகத் தேரைச் செலுத்தினான். அங்கு வழியில் ஒரு பசுவும் அதன் கன்றும் நின்று கொண்டிருந்தன: அக்கன்று தேரின் சப்தத்தை இதற்கு முன்பு கேட்டதில்லை. ஆகலின் அது வெருண்டு துள்ளி ஓடித் தேர்க்காலின் அடியில் விழ, தேர் கன்றின்மேல் ஏறிவிட்டது. அவன் தேரை நிறுத்தப் பல வழிகளில் முயன்றான். ஆனால் அவனால் இயலவில்லை. தேரின் அடியில் இரத்த வெள்ளம் பெருகியது. கன்று இரத்த வெள்ளத்தில் மிதந்தது. அதைப் பார்த்த பசு கண்ணீர் விட்டுக் கதறியது.

அக்காலத்தில் அரண்மனைக்கு வெளியே ஒரு மணி கட்டப்பட்டு இருந்தது. துன்பம் நேர்ந்த காலத்து யாராவது வந்து அம்மணியை அடிப்பர்; அரசன் வெளியே வந்து பார்த்து அவர்களுக்குள்ள துன்பத்தைப் போக்குவான். இது அக்கால வழக்கம்.

அதன்படி பசுவும் வந்து அம்மணியை அடித்தது. மணிச் சத்தம் கேட்கவே அரசன் வெளியில் வந்து பார்த்தான். அங்கு ஒரு பசு கண்ணீர் விட்டு நின்றுகொண்டிருந்தது. அதைப் பார்த்த மன்னனுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. பசுவோ வாயில்லாத பிராணி. அதுவோ நியாயத்தை வேண்டி நிற்கின்றது.

உடனே அவன் பல வேவுகாரர்களை அழைத்துப் பசுவின் கவலை யாது என அறிந்து வரச் சொன்னான். அவர்களும் சென்று விசாரித்துப் பசுவின் கவலையை அறிந்து அரசனிடம் வந்து கூறினர். இதைக் கேட்ட அரசன் தன் மகனை அழைத்துவரக் கட்டளையிட்டான். மகன் குற்றவாளியைப்போல் ஒரு கூண்டில் அடைபட்டுக் கிடந்தான்.

அரசன் முடிவில் பசுவிற்கு நியாயம் வழங்கத் தன் மகனையும் பசுவின் கன்றினைப் போலத் தேரின் அடியில் வீழ்த்திக்கொல்ல வேண்டுமென்று கூறினான். இதை யாவரும் ஏற்றுக் கொள்ளவில்லை. உடனே அவன் தானே தேரை ஓட்டிச் சென்றான். கன்று இறந்த இடத்தில் தன் மகனைக் கிடத்தி அவன் மேல் தேரை ஓட்டினான்; மகனும் இறந்தான். இம் மன்னனது அருஞ்செயலால் மகிழ்ந்து பரமசிவன் தோன்றி அரசனைப் பார்த்து "நீ நீதி தவறாமல் ஆட்சி புரிந்தாய். பசுவின் கன்றுக்காக உன் மகனையே கொன்றாய். உனது நீதியை மெச்சினேன்" என்று கூறி மகனுக்கும் கன்றுக்கும் உயிரைக் கொடுத்தார். கன்று துள்ளிக் குதித்துத் தாயின் அருகே ஓடியது. தாய்ப் பசு மகிழ்ந்தது. மகனைக் கண்ட அரசனும் அவனைத் தழுவிக்கொண்டான். பல வருஷங்களுக்குப்பின் அந்த அரசகுமாரனும் நீதி தவறாமல் ஆண்டான்.

சி. பி. ராஜலக்ஷ்மி,
நான்காம் படிவம், 'ஈ' பிரிவு.

ஒரு பொன்னாள்

ஸரஸ்வதி பூஜையின் மறுதினமாகிய விஜய தசமி நன்னாளில் எம் கலாசாலைக் கமலா நெஹ்ரு ஹாஸ்டலின் திறப்புவிழா நடைபெற்றது. அன்று, மாணவிகளாகிய நாங்கள் மாலை 3–30 மணிக்குப் பாடசாலைக்குச் சென்றோம்.

பாடசாலையின் வாயிலில் வெள்ளை முத்துக்கள் பதித்தாற்போல் கோலங்கள் போடப்பட்டிருந்தன. கமலா நெஹ்ரு ஹாஸ்டலின் எதிரில் அழகிய பந்தல் போடப்பட்டிருந்தது. அதில் பல மின்சார விளக்குகள் ஒளிவிட்டுக் கொண்டிருந்தன. பல வண்ணக் காகிதங்களால் செய்யப்பட்ட தோரணங்கள் கட்டப்பட்டிருந்தன. ஹாஸ்டலும் மின்சார விளக்குகளால் அலங்கரிக்கப் பட்டிருந்தது.

Our Secretary with our President at the religious function on the opening of the Kamala Nehru Hostel



Welcome to DR. C. P. RAMASWAMI AIYAR, with Purna Kumbum. — Note the humility!



Dr. C. P. RAMASWAMI AIYAR
opening the Kamala Nehru Hostel

Our humble token of
appreciation to our
Building Engineer.

Mrs. Amritha Achutharaman
unveiling the portrait of
Mrs. KAMALA LAXMAN

ஹாஸ்டலின் எதிரிலுள்ள மரங்களில், பல வர்ண மின்சார விளக்குகள் பிரகாசித்தன. அவைகள் பல வர்ணக்கனிகள் தொங்குவதைப் போல் காட்சியளித்துக் காண்பவர் மனத்தைக் கவர்ந்தன.

பந்தலில் எல்லோரும் அமருவதற்காக நாற்காலிகள் வரிசையாகப் போடப்பட்டிருந்தன. எல்லோரும் அவரவர்களுக்கு அளிக்கப்பட்ட ஆசனத்தில் அமர்ந்தோம். மாலை 6 மணிக்குச் சென்னை கவர்னர் ஸ்ரீ பிரகாசா அவர்களும், டாக்டர் ஸ்ரீ ஸி. பி. ராமஸ்வாமி அய்யர் அவர்களும் விஜயம் செய்தனர். கலாசாலையின் மாணவிகள் அணிவகுத்து நின்று வரவேற்றனர். கனம் ஸ்ரீ பிரகாசா அவர்களின் தலைமையில் திறப்புவிழா தொடங்கியது. மாணவிகள் உபநிஷத் ஓத, கூட்டம் ஆரம்பமாயிற்று. சில மாணவிகளால் இன்னிசை விருந்து அளிக்கப்பட்டது.

பாடசாலையின் தலைவர் ஸ்ரீ ஸி. ஆர். ஸ்ரீநிவாசன் அவர்கள் வந்திருந்தவர்களுக்கு நல்வரவு கூறினார். டாக்டர் ஸி. பி. ராமஸ்வாமி அய்யர் அவர்கள் ஹாஸ்டலைத் திறந்தார். கனம் ஸ்ரீ பிரகாசா அவர்களும், ஸி. பி ராமஸ்வாமி அய்யர் அவர்களும் அரிய பிரசங்கம் செய்தனர். காரியதரிசி ஸ்ரீ திருமலாசாரியார் அவர்கள் ஹாஸ்டலுக்கான வரவு செலவு கணக் கூறி, கமலா நெஹ்ருவின் படத்தை அளித்ததற்காக ஸ்ரீ எஸ். எஸ். வாசன் அவர்களையும் பாராட்டி வந்தனம் தெரிவித்துக் கொண்டார்.

ஆசிரியை குமாரி லீலா அவர்கள், டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன், ஜெனரல் கரியப்பா, ராஜகுமாரி அமிர்த கௌரி, ஸ்ரீமதி இந்திரா நேரு, காமராஜ் நாடார் ஆகியவர்களிடமிருந்து வந்திருந்த வாழ்த்துக் கடிதங்களைப் படித்தார். கலாசாலையின் தலைமை ஆசிரியை ஸ்ரீமதி ஸரஸ்வதி ராமஸ்வாமி அவர்கள் வந்தனோபசாரம் கூறினார். மங்களம் பாடிய பின் கூட்டம் இனிது கலைந்தது.

எம். என். லக்ஷ்மி,
ஆறும் 'படிவம், 'ஆ' பிரிவு.

விளம்பர வித்தை

எந்தத் தினசரிப் பத்திரிகையையும் புரட்டிப் பாருங்கள். அநேகமாக விளம்பரங்கள் இல்லாத பத்திரிகைகளே இல்லை. ஆடிட் பீரோ ஆப் ஸர்க்குலேஷன் என்னும் பிரபல விளம்பர யோசனைகள் தருகின்ற கம்பெனிகளும் இருக்கின்றன. இதிலிருந்தே விளம்பரத்தின் அவசியத்தை உணரலாம். இதை விளக்க ஓர் அரிய சம்பவம் நடந்தது.

கார்மெய்கேல் என்பவர் இங்கிலாந்தில் பிரபுவாக இருந்த சமயத்தில் அவரிடம் சில உயர்ந்த ரகக் கைக்குட்டைகள் இருந்தன. அவற்றின் வேலைப்பாடு மிக அருமை வாய்ந்தது. ஒரு சமயம் ஒரு கம்பெனி இக் கைக்குட்டைகளுக்காகப் பெருந்தொகை கேட்டது. ஆகவே இவர் அவற்றை உற்பத்திசெய்யும் கம்பெனியிடமிருந்தே நேரிடையாக வாங்க எண்ணினார். அவர் விசாரித்ததில் அவை இந்தியாவில் செய்யப்பட்டன என்று தெரியவந்தன. ஆகவே அவர் இந்தியாவிலிருந்த வைஸிராய்க்கு இவை எங்குத் தயாராகின்றன என்று தெரிவிக்கும்படி கடிதம் எழுதினார். வைஸிராய் விசாரித்து இங்கு எங்குமே செய்யப்படவில்லை என்று பதில் எழுதினார்.

கார்மெய்கேல் தான் வாங்கின கம்பெனியிடமே அரைடஜன் கைக்குட்டைகளை அனுப்புவதுடன் அவை உற்பத்திசெய்யும் விலாசத்தையும் எழுதும்படி கூறினார். அவர்கள் இவை கல்கத்தாவிற்கருகிலுள்ள மூர்ஷிதாபாத்தில் தயாரிக்கப்படுகின்றன என்று தெரிவித்தனர். இந்தியாவிலேயே இருக்கும் வைஸிராயால் அறிய முடியாத விஷயம லண்டன் விற்பனைக் கம்பெனிக்கு எட்டியது விந்தையிலும் விந்தையல்லவா? இதேபோல் எளிய பொருளின் உதவிகொண்டு அரிய வேலைப்பாடமைந்த பொருள்கள் செய்யப்பட்டாலும் விளம்பரப் படுத்தாவிடில் யாருக்கும் தெரிவதில்லை. ஆகவே வியாபாரத்தின் உயிர்நாடி விளம்பரமாகும்.

விளம்பரம் ஏற்படாமுன் பொருள்கள் விற்பனையாகாமலில்லை. அவையெல்லாம் மிகவும் அருமையான வேலைப்பாடுள்ளன வாயினும் மலிவான விலைக்கு அவ்வூரிலுள்ள ஒரு சிலராலேயே வாங்கப்பட்டன. எனவே நிறைய பணத்தைக்கொட்டி மிகவும் கஷ்டப்பட்டு ஒரு பொருளைச் செய்து அதை நல்ல இலாபத்திற்கு விற்றால் தானே ஒரு முதலாளிக்குச் சந்தோஷம் ஏற்பட்டு தொழி

ஸில் ஊக்கம் அதிகமாகும்! மேன்மேலும் அரியபொருள்கள் செய்ய உற்சாகம் ஏற்படும்! எனவே பொருள்களை விற்பனைசெய்ய ஒரு அரிய சாதனமாக விளம்பரத்தைப் பயன் படுத்த வேண்டியிருக்கிறது.

விளம்பரம் தற்காலத்தில் மலிந்து கிடக்கின்றன. அற்பமான ஒரு புத்தகத்தைப் பார்த்தாலும் அதில் நாலு பக்கங்கள் விளம்பரமாயுள்ளன. இந்தியாவில் விளம்பரம் கீழ்த்தரமாயுள்ளது. அயல் நாட்டில் அவ்வாறில்லை. மூலப் பொருள்கள் மிகுதியுள்ள இந்நாட்டில் ஏன் வியாபாரம் க்ஷீணநிலை அடைந்துள்ளது? அதற்கு முக்கிய காரணம் விளம்பரம் அளவுக்கு மிஞ்சியதுதான். வியாபாரிகள் மேன்மை அடைய வேண்டும் என்னும் நோக்கத்துடன் வியாபாரம் செய்வதில்லை. சுயநலத்துடன் வாழ்கின்றனர். ஒரு சிலரே நல்ல முறையில் வியாபாரத்தை நடத்தி மக்கட்கு நன்மையைப் பயக்கின்றனர். நம் நாட்டு மூலப் பொருள்கள் பெரும்பாலும் வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றன. அதைக்கொண்டு அயல் நாடுகள் நல்ல முறையில் சுத்தமான பொருளாகச் செய்து நம் நாட்டிலேயே விற்று அதிக இலாபத்தை அடைகின்றன. அதற்கு ஊக்கமளிப்பதுபோல் ரூபாய்க்கு ஒரு அணா, ஆறு தம்பிடி வீதம் விற்பனைவரி நாம் கொடுத்து அயல்நாட்டுத் துணியை நாம் வாங்கவேண்டி வந்துள்ளது.

நம் நாட்டிலே கற்றறிந்த ஒரு சிலரே நல்ல முறையில் பொருள்களை உற்பத்திசெய்து அதிக விளம்பரமின்றி அயல் நாடுகளிலும் வெளியாகும் நல்ல பத்திரிகைகளிலே ஆடம்பரமின்றிக் குறைந்த செலவில் விளம்பரப் படுத்திப் பொருள்களைவிற்று இலாபமடைகின்றனர். மற்றவர்கள் மட்டரகமான பொருள்களைத் தயாரித்து அவற்றை விற்க முடியாமல் மதிப்புரை காட்டச் சினிமா நட்சத்திரங்களின் வீட்டிற்கும், நோட்டீஸ்க்காக அச்சிடும் சாலைக்கும், இனாமாகப் பென்சில் போன்ற பொருள்களைப் பள்ளி மாணவர்கட்குக் கொடுக்க பள்ளிக்கூடத்திற்கும், அல்லது போதாமல் வீடு வீடாகச் செல்ல பல பெண் மணிகளை நியமித்தும், தாங்கள் உற்பத்தி செய்யும் பொருள்களில் பாதியை ஜனங்கட்கு மாதிரி (Sample) அளித்தும் திண்டாடுகின்றனர். அதுமட்டுமா? போதாக்குறைக்கு எங்களுடைய பொருளகளை வாங்கினால் சாமானோ அல்லது விலையைக் கொஞ்சம் தள்ளியோ அல்லது வேறு ஏதேனும் இனாமோ தருகிறோம் என்றும் கெஞ்சாக்குறையாக விண்ணப்பித்துக் கொள்கின்றனர். இவை போதாமல் தாங்கள் செய்யும் பொருள்களுக்குக்கூட அவ்வளவு பணம் செலவழிக்காமல் தினந்தோறும் வெளியாகும் பத்திரிகைகளில் – அதுவும் முதல் பக்கத்தில் மிகவும் பெரியதாக விளம்பரம் செய்ய அதிகப் பணத்தைச் செலவழித்து வருவதைக் கண்கூடாக் காண்கிறோம். வியாபாரத்தின் உயிர்நாடியான இவ் விளம்பரமே அறிவுள்ளவர்களை இது மோசமான பொருள் இது வாங்கக்கூடாதென்று எண்ணும்படி செய்கிறது.

எனவே நம் நாடு அயல்நாட்டைப்போல் மேன்மையடைய முதன் முதலில் மக்கள் செய்யவேண்டிய தொண்டு கைத்தொழிலை முன்னேறச்செய்து அதிகமாக உள்ள விளம்பரத்தைப் பின்னேறச் செய்யவேண்டும். நம் நாட்டு மூலப் பொருள்களை அயல்நாட்டிற்கனுப்பாமல் நாமே நல்ல பொருள்களைச்செய்து அயல் நாட்டிற்குகனுப்பினால் ஆடம்பர விளம்பரமின்றியே பொருள்கள் விரைவில் விற்பனையாவதில் ஏதேனும் ஐயமுண்டோ?

வெ. து. மைதிலி,
ஆறும் படிவம், 'ஆ' பிரிவு.

பக்கம் 36-ல் உள்ளவற்றிற்கு விடைகள் :

மறைந்திருக்கும் ஊர்

கல்கத்தா, பர்மா, லாகூர், கள்ளிக்கோட்டை, சிவகாசி, காக்கிநாடா, குடகு.

புதிர் மொழிகள்

1. கா – சோலை, காவி–நிறம், காவிரி–நதி.
2. மதுரை – ஓர் நகர். மது–தேன் (கள்). பிரபு : துரை (அல்லது) சிற்றரசர்.
3. ஆதிரை – நக்ஷத்திரம். திரை : அலை, ஆரை – மதில். ஆதி – கடவுள்
4. மூன்று தக்கள்–முத்து (அது பல்லை ஒக்கும்)
5. காசினி – மூன்றெழுத்து. காசி–புண்ணியஸ்தலம்,

ரூபாய் சொன்ன கதை

புத்தகம் வாங்குவதற்கென என் தந்தையார் ஒரு ரூபாய் கொடுத்தார். அது தேய்ந்துபோன பழைய ரூபாயாயிருந்தது. அது செல்லுமோ செல்லாதோ என்ற ஐயத்தோடு அதனை மேஜையின் ஒரு புறத்தில் வைத்துவிட்டுப் பாடங்கள் படிக்கத் தொடங்கினேன். படித்துக்கொண்டிருக்கும் போதே என்னை அறியாமல் துயிலில் ஆழ்ந்தேன். திடீரென்று யாரோ என்னைக் கூப்பிடுவது போலிருந்தது; கவனித்தேன். தேய்ந்திருந்த அந்த ரூபாய் என் முன்னே நின்று 'நான்தான் உன்னைக் கூப்பிட்டேன்' என்றது. வியப்பினால் பேச நா எழாமல் கவனித்தேன். அது மேலும் பேச ஆரம்பித்தது.

"பெண்ணே! என்னைத் தெரிகிறதல்லவா? நீ நினைத்ததுபோல நான் தேய்ந்த ரூபாய்தான். ஆனால் நான் எப்படி இருந்தேன்; எங்கெங்கு எவ்வெவ்வாறு சுற்றினேன் என்பதை நீ அறிந்தால் எனக்கு மதிப்புக் கொடுப்பாய். அவற்றைக் கூறுகிறேன், கேள்" என்று தன் கதையைச் சொல்லத் தொடங்கியது.

"நான் தோன்றிய காலம் எது என்பது உனக்குத் தெரியும். என்னை நன்றாய் உற்றுப் பார்த்தால் உணரலாம். நான் இப்போது புதுமை நீங்கித் தேய்ந்து பழமை தாங்கிக் காணப்படுகிறேன். ஆகையால் நான் பிறந்த நாளை நீ விரைவில் பார்த்துத் தெரிந்துகொள்ள முடியாது. நான் பல ஆண்டுகளாகப் பலருடைய கைமாறி வந்ததனால் பழைய ரூபாயாகி இருக்கிறேன். என்னுடைய ஒரு பக்கத்தில் உள்ள ஆறாம் ஜார்ஜ் அரசரின் தலையின் வடிவு தேய்ந்து இருக்கிறது. மறுபக்கத்தில் உள்ள எழுத்துக்களும், வருஷமும் தேய்ந்துவிட்டன. ஆனால் என்னுடைய இளமைப்பருவம் எனக்கு நன்றாய் ஞாபகத்தில் இருக்கிறது. நான் முதல் முதல் அரசாங்க பொருட்சாலையில் என் நண்பர்களோடு போய்ச் சேர்ந்தபோது பளபளவென்று ஒளி வீசிக்கொண்டிருந்தேன். அப்போது அரசரின் உருவமும், எழுத்துக்களும் நன்றாகவும், அழகாகவும் விளங்கின. அப்படிப்பட்ட என்னை இன்று பலரும் திருப்பித் திருப்பிப் பார்க்கிறார்கள். ஒரு சிலர் வேண்டா வெறுப்போடு கொண்டு போகிறார்கள். இதற்குக் காரணம் நான் எங்கும் சுற்றிவந்ததேயாகும். நான் சுற்றி வந்த விவரத்தைச் சொல்லுகிறேன்.

"நான் பொருட்சாலையிலிருந்து பொருள் தொகு சாலைக்குச் சென்றதும் என்னுடைய சுறுசுறுப்பான வாழ்க்கை தொடங்கியது. அங்கிருந்து ஒரு மனிதனிடம் சென்றேன். போகும்போது அவன் சட்டைப்பையில் போனேன். ஆனால் நான் அவனிடம் வெகு நேரம் இல்லை. அவன் போகும்போதே ஒரு கடைக்காரனிடம் என்னை கொடுத்துவிட்டான். அவன் என்னைப் பெட்டியில் வைத்துப் பூட்டினான். அவன் 'புது ரூபாய்களைப் பார்த்துப் பலநாள் ஆயின' என்று சொல்லி என்னை அப்படி இப்படி அசையாமல் பையில் போட்டுக் கட்டிப் பெட்டியில் வைத்துவிட்டான். அதனால் நான் என் மேனி மாறாமல் பலநாள் அங்கேயே இருந்தேன்.

"ஆனால், நான் பல நாணயங்களோடு கலந்திருந்தேன். அங்குச் செம்பு நாணயங்களும் இருந்தன. என் மேனி வெள்ளியால் ஆனது. ஆதலால் தாழ்ந்த இனத்தைச் சேர்ந்த அந்தச் செம்பு நாணயங்களைக் கண்ணெடுத்தும் பார்ப்பதில்லை. மேலும் எனக்கு மதிப்பு அதிகம். நாணயங்களுக்குள்ளே நான்தானே மேலானவன்! என் மதிப்புள்ள வேறு சில ரூபாய்களும் இருந்தன. இருந்தாலும் என்னைப்போல அவை அவ்வளவு புதியதாயில்லை.

"இவ்வாறு நான் மிக்க மதிப்போடு இருக்கும்போது மற்ற நாணயங்கள் என்மேல் பொறாமை கொண்டன. அதனால் அவைகளிடம் உள்ள அழுக்குக்களையெல்லாம் என்மேல் பூசின. எங்கும் தீயவர் பலர் இருந்தபோதிலும் ஒரு சில நல்லவரும் இருப்பார் அல்லவா? அதைப் போலவே அப்பெட்டியில் ஒரு நல்ல பழைய ரூபாய் இருந்தது. அது எனக்குச் சில புத்தி மதிகளைக் கூறியது. 'அன்பா, நீ மிகுதியாகக் கர்வங் கொள்ளாதே. பழைய ரூபாய்களுக்குத்தான் மதிப்பு அதிகம். பிறந்தவர் இறத்தலும், இறந்தவர் பிறத்தலும் இவ்வுலக இயற்கை. அதுபோல தோன்றிய ரூபாய்கள் பழையதாய்த் தேய்வதும், தேய்ந்த ரூபாய்கள் மீண்டும் புதிதாகத் தோன்றுவதுமுண்டு. நீ மிகவும் உலக அநுபவம் இல்லாமல் இருக்கிறாய்,

பெட்டியுள் இருந்தால் எப்படி உலக அனுபவம் வரும்? புதிதாய் இருந்தாலும், தேய்ந்து மங்கி இருந்தாலும் ஒரே மதிப்புத்தானே!. ரூபாய் ரூபாய் தானே! பொன் குப்பையில் இருந்தாலும் அதன் மதிப்புக் குறையாது. அது போல ரூபாய் தேய்ந்திருந்தாலும் அதன் மதிப்புப் போகாது' என்று கூறியது அது.

"இவ்வாறு நாங்கள் இருவரும் பேசிக் கொண்டிருக்கும்போது கடைக்காரன் பெட்டியைத் திறந்தான். அதனால் சம்பாஷணை அதனோடு நின்றுவிட்டது. பெட்டியைத் திறந்து என்னை எடுத்து ஒரு பெண்ணிடம் கொடுத்தான். அதனால் அவளுடைய கையிலுள்ள பையில் அகப்பட்டுக்கொண்டேன். 'எத்தனை நாள் அங்கிருக்க வேண்டுமோ' என்று மனம் வருந்தினேன். நல்லவேளையாக அந்தப்பையில் ஒரு துவாரம் இருந்தது. அதன் வழியாக நான் உடனே வெளியே வந்துவிட்டேன். ஆனால் ஒரு அழுக்கடைந்த கால்வாயில் உருண்டு போய் விழுந்தேன். அப்போது எனக்குத் 'திருட்டுச்செயல் தகாது' என்று தோன்றியது. அப்பொழுது ஒரு சிறுவன் என்னைக்கண்டு எடுத்தான். அவன் ஒரு தின்பண்டக்காரனிடம் என்னைக் கொடுத்தான். அதனால் நான் தாழ்வான அம்மனிதனிடம் சிலநாள் இருக்க நேர்ந்தது. ஒவ்வொன்றும் இருக்கவேண்டிய இடத்தில் இருந்தால் தானே அதற்குப் பெருமை உண்டாகும்? கடைசியாக ஒரு சிறு கடைக்காரனிடம் சென்றேன். அங்கே நல்ல கூட்டத்தில் சேர்ந்து தங்கினேன். சில நாளில் பலர் கைகளில் மாறினேன். இப்போது உன் தந்தையின் கையிலிருந்து உன்னிடம் வந்திருக்கிறேன்.

"இவ்வாறு நான் மிகவும் சுறுசுறுப்பான வாழ்க்கையை நடத்திக் கொண்டிருக்கிறேன். நான் உலோபிகளிடம் அகப்பட்டிருந்தால் அவர்களின் இரும்புப் பெட்டியில் அகப்பட்டு வருந்தியிருப்பேன். அவ்வாறு அவர் கையில் சிக்காமல் என் வாழ்க்கை மகிழ்ச்சியாக நடந்து கொண்டிருக்கிறது. பிறருக்குப் பயன்படவே நான் சுற்றித்திரிகிறேன். ஆதலின் தேய்ந்து போனேன். ஆனால் மதிப்புக் குறையாது. உன் கருத்தையும் நிறைவேற்றுவேன். பயப்படாதே! என்னை அவமதித்ததற்குத் தண்டனையாக ஒரு குட்டு வாங்கிக்கொள்" என்று கையை ஓங்கிக் குட்டியது. ஐயோ! என்று தலையைத் தடவிக்கொண்டு விழித்தேன். புத்தகத்தை விரித்து வைத்துக்கொண்டு தூங்கவா செய்கிறாய்' என்று மறு குட்டுவைக்க என் தாய் கையை ஓங்கிக்கொண்டு நின்றாள். அதைப் பார்த்து அந்த ரூபாய் என்னை ஏளனம்செய்து சிரிப்பது போலிருந்தது.

S. B. ஸரோஜா,
ஆறும் படிவம், 'அ' பிரிவு.

போரும் அதன் விளைவும்

உலகம் தோன்றிய நாள் முதல் இருட்டும் வெளிச்சமும் கலந்தே உள்ளன. அதைப் போல ஜன சமூகங்களிடையே போரும் அமைதியும் இருந்து வந்துள்ளன. தற்காலத்தில் நாகரிகம் வளர்ந்துள்ளது; கலை பெருகியது. இவையாவும் உண்மையே எனினும் போர்க் கொடுமைகளை நினைத்துப் பார்க்கவும் மனம் அஞ்சுகிறது.

ஆகாய விமானங்களிலிருந்து குண்டுகள் எறிவது, அணுகுண்டால நாட்டழிப்பது ஆகிய இத்தகைய கொடுமைகள் முற்காலத்தைவிடப் பன்மடங்கு மிகுந்துள்ளன. வெடிகுண்டைக் கண்டறியாமுன் கல், வில், வாள், வேல் முதலிய வற்றால், போரில் ஈடுபட்ட ஒரு சிலரையே வெட்டி வீழ்த்தி வெற்றியோ, தோல்வியோ அடைந்தனர். இக்காலத்திலோ நீர், நிலம், வானம் என்ற மூவழியிலும் போரில் ஈடுபடாத எண்ணிறந்த ஆண், பெண், குழந்தைகளை இரக்கமின்றிப் பசிப்பிணியால் வாட்டியும், புதிய போர்க்கருவிகளைக்கொண்டு வருத்தியும் கொல்வது இயல்பாக இருக்கிறது. போர் நடக்கும் காலங்களில் ஒருநாட்டு மக்கள் அனைவரையும் பகைவர்களாகக் கருதுவது இருபதாம் நூற்றாண்டில் நாகரிகச்சின்னம் போலும்! இதற்குக் காரணம் புதிய நாசக் கருவிகளை பயன்படுத்தும் அவசியத்தால் எழுந்த மிருக உணர்ச்சியே. நாட்டை வேருடன் கெடுக்கும் போர் எத்தனை கொடியது என்பதற்கு வேறு சான்று வேண்டுமோ?

இரண்டு உலக மகாயுத்தங்களிலும் ஏற்பட்ட ஆட்சேதம், பொருட்சேதம் நினைக்கவொண்ணுதவை. வெற்றிச்சிறப்பு இத்தகைய உண்மைகளை மேகங்களைப்போல் மறைக்கின்றன. போரை வேருடன் களைய மேல்நாட்டு அரசியல் நிபுணர் எண்ணத் தொடங்கியது, முதல் மஹாயுத்தத்தின் பின்னேதான்.

'தன்னுயிரைக் கொடுத்தேனும் பிற உயிரைக் காக்க வேண்டும்; தீங்கிழைத்தோருக்கும், நன்மைபுரிய வேண்டும்' என்றே எல்லா சமயாசாரியரும் கூறியுள்ளார்.

ஆனுல் புத்தரைப்போல் நாடு துறந்து அஹிம்சா தர்மத்தை மேற்கொண்டதற்கும், அசோகர் கலிங்கப் போரின் கொடுமையைக் கண்டு ஆயுள் முழுவதும் போரைத்தவிர்த்ததற்கும், தன்னைத்தான் வருத்திக்கொண்டு பிற உயிருக்குத் தீங்கு நினையாது, அஹிம்சா முறையைத் தழுவிய சத்தியாக்ரஹப் போரைக் காந்தியடிகள் நிகழ்த்தி வெற்றியுற்றதற்கும் இணையாவது உலக சரித்திரத்தில் இல்லை என்றே சொல்லலாம்.

ஒவ்வொரு நூற்றுண்டிலும் பல்வேறு நாடுகளில் அத்தகைய மகான்கள் அவதரித்து மக்கள் உள்ளத்தைக் கவர்ந்தால் போர் மனப்பான்மை அறவே ஒழிந்து அமைதி நிலவ இடமுண்டு. ஆனுல் ஆயிரம் ஆண்டுகளுக்கு ஒரு முறையே தான் அத்தகைய ஒருவரை உலகம் பெறமுடிகிறது. ஆதலால் கூடியமட்டும் போர் நிகழாதபடி பார்த்துக்கொள்வதும், அவசியமேற்பட்டால் அதிகச் சேதமில்லாமல் அதை நிகழ்த்துவதும் அரசாங்க நீதியாக அமைய வேண்டும்.

ஆராய்ந்து பார்த்தால் அமைதிக்கு அடிகோல சர்வதேசச் சட்டம் வேண்டும் என்ற நியதி இப்போதைய உலகின் கருத்தே என்று கொள்ளவேண்டும். போரைத் தடுக்க சமாதான உடன்படிக்கைளும், நாடுகளின் கூட்டுறவுக் கட்சிகளும் வல்லரசுகளுக்குச் சமமாக அதிகாரம் பெற்று எந்த நாட்டையும் போரில் ஈடுபடாமல் தடுக்கவேண்டும்.

விஞ்ஞான அறிவு வளர்ச்சியால் உலக நாடுகள் யாவும் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டிருக்கின்றன. ஆனுல் தேசிய உணர்ச்சியால் எழும் கொடிய போர்களைத்தடுக்க அவையும் பயனற்றவை. சர்வதேசச்சட்டங்கள் பிறப்பித்துள்ளனர். எனினும் பலாத்கார முறையில் அவற்றை மீறி ஒரு நாட்டார் நடந்தால் எவ்வாறு தடுப்பது என்பதே இன்றளவும் சிக்கலுக்கு இடமாக இருக்கிறது. மந்திரிகள் மகாநாடுகள் கூடிப் பேசுகின்றனர். வெளி நாட்டுறவைப்பற்றி மந்திராலோசனையும் தந்திராலோசனையும் நடைபெறுகின்றன. ஆயினும் போர் எழுப்ப முயலுவதைத் தடுப்பது கடினம். யுத்தத்தின் காரணங்களை அறிந்து அவைகளைக் களைவதே அம்மகாநாடுகளின் நோக்கம்.

இரண்டாம் உலக யுத்தத்தில் முன்னிலும் கொடிய நாசக்கருவிகள் பயன்படுத்தப்பட்டன. ஒவ்வொரு நாடுகளுக்கும் பிறநாடுகளுடன் சண்டையிடவோ, சமாதானம் செய்து கொள்ளவோ தனி உரிமையுண்டல்லவா? அவ்வுரிமையைப் போக்கினுலன்றி சர்வதேசச் சட்டப்படி அமைதியை நிறுவுவதெங்ஙனம்? இத்தகைய சிந்தனைகள் முதல் உலக மஹாயுத்தத்திற்குப்பின் சர்வதேசச் சங்கமாக உருவாயின.

தேசிய அரசாங்கங்கள் தத்தம் அரசுரிமைகளைச் சிறிதளவு உலக நன்மையை நாடிக் குறைத்துக்கொண்டால் அன்றி அணுகுண்டு யுகத்தில் கொடிய போர்களைத் தவிர்க்க முடியாது; சர்வதேச அரசியல் அமைப்பும் உருவாகாது.

சரண் புகுந்தவரை மரியாதையாக நடத்துவது யுத்த தர்மம். இல்லையெனில் தோற்றவர்கள் பழிக்குப்பழி வாங்கச் சமயம் பார்த்திருப்பர். இது மானிடரின் இயல்பு.

இத்தகைய நிலையும், அணுகுண்டின் அபாயமும் சர்வதேச அமைப்புக்குப் பெரிய நாடுகளும் கட்டுப்படவேண்டியதை அறிவுறுத்துகின்றன. இனியுத்தம் நிகழுமாயின் நாகரிகம் அழியும்; உலகமக்கள் அடியோடுமாள்வர். அதைத் தவிர்க்கக்கூடியது எல்லா நாடுகளுக்கும் மேற்பட்ட உலக அரசியல் அமைப்பே. வருங்காலயுத்தத்தின் கொடுமைகளை இளைஞர்கள் அறிந்து, முன்னேர் கற்றறிந்தொழுகாதவற்றையுணர்ந்து, அமைதியை நிலைநாட்டப் பாடுபடுவோமாக!

R. சீதாலக்ஷ்மி,
ஆறும்படிவம், 'ஈ' பிரிவு.

அணைகடந்த வெள்ளம் அழுதாலும் வராது

'அணைகடந்த வெள்ளம் அழுதாலும் வராது' என்பது ஒரு பழமொழி. இதன் பொருள் கரையை மீறிச் சென்ற நீர்ப்பெருக்கு மீண்டும் வரவேண்டும் என்று வருந்தினாலும் வராது என்பதாம். இதனால் விளங்கும் கருத்து, கையைவிட்டு நழுவிய பொருள் மீண்டும் வராது என்பதாம். இதனால், நாம் பொருளை இழந்தோமே என்று அதையே மனதில் வைத்துக் கொண்டு வருந்தக் கூடாது. இழந்த பொருள்களை மீண்டும் பெற முயற்சி செய்ய வேண்டும். அன்றேல் பொருளை இழக்க நேராதபடி எச்சரிக்கையாய் இருக்க வேண்டும். அப்படி இல்லாமல், கைவிட்டு நழுவிய பிறகு வருந்துவது உசிதமன்று. இதனை விளக்க ஒரு கதை உண்டு.

முன்னொருகாலத்தில் அரசன் ஒருவன் இருந்தான். அவன் தன் மனைவியோடு ஒருமனப்பட்டு வாழ்ந்து வந்தான். அவன் மனைவியோ கற்பில் அருந்ததி என்றே சொல்லத்தகுந்தவள்; தன் கணவனைத் தெய்வமாக எண்ணியவள். ஆகவே ஒருமனப்பட்டு இல்லறத்தை இனிது நடத்தி வந்தனர்.

ஒரு நாள் அவர்கள் வசிக்கும் அரசவீதி வழியாக மக்கள் திரள் திரளாகச் சென்று கொண்டிருந்தார்கள். அவர்களிடையே இரண்டு பிணங்கள் தூக்கிச் செல்லப்பட்டன. அவற்றைக் கண்ணுற்றாள் அரச மாதேவி; இரு பிணங்கள் ஓரே சமயத்தில் செல்லுதற்குக் காரணத்தை அறிந்துவரத் தன் வேலையாள் ஒருவனை அனுப்பினாள். அவன் விஷயம் அறிந்து வந்து, 'இப்பொழுது பிணமாகத் தூக்கிச்செல்லப்பட்டவர்கள் நம்மூரில் வாழ்ந்தவர்களே. கணவன் இறந்ததால் அவன் மனைவியும் தான் இனி உலகிலிருந்து பயனில்லை என்று அறிந்து, தற்கொலைபுரிந்து உயிர் விட்டாள். அவளது கற்பின் தன்மையை மெச்சிய நகரமாந்தர் இப்படித் திரண்டு போகின்றனர்' என்றான். இதைக்கேட்ட அரசமாதேவி 'ஓ! இதுதானா அதிசயம்! நல்ல கற்புடைய மனைவியாய் இருப்பின், கணவர் இறந்தானெனின், விட்டாள் உயிர் என்ற நிலையில் கணவனோடு உயிர்விட வேண்டும்' என்று கூறினாள். இதைக்கேட்ட மன்னன் அரசியை ஒரு முறை சோதிக்கவேண்டும் என்று தீர்மானித்தான்.

ஒரு நாள் அரசன் வேட்டையாடக் காட்டிற்குச் சென்றான். சென்றவன் ஒரு வேலையாளை அழைத்துத் தான் ஒரு புலியால் கொல்லப்பட்டதாக அரசிக்குத் தெரிவித்து என்ன நடக்கிறது என்பதையும் அறிந்துவரக் கட்டளை இட்டான். அவனும் அங்ஙனமே அரசியினிடம் தெரிவிக்க, 'அரசி ஆ! அப்படியா!' என்று கீழே விழுந்தாள். உடனே உயிர் போய்விட்டது. வேலையாள் இதனை ஓடோடியும் சென்று அரசனிடம் தெரிவித்தான். அரசன் வந்து பார்த்தான்; மனைவியின் நிலையைக்கண்டு வருந்தினான்; அழுதான்; அலறினான்; ஆராயாது சொன்னேனே என்றான். என்ன செய்தும் என்ன பயன்! அணைகடந்த வெள்ளம் அழுதாலும் வருமா?

அரசன் தன் மனைவிக்குச் செய்யவேண்டிய ஈமக்கடன்களைச் செய்தான். அரசன் பித்துக் கொண்டவனைப்போல் பிதற்றிக் கொண்டிருந்தான். நாட்டின் விவகாரங்களையும் சரிவரக் கவனிக்கவில்லை. எப்பொழுதும் சிங்காரத் தோட்டத்திலேயே இருந்து வருத்தப்பட்டுக் கொண்டிருந்தான்.

இப்படியிருக்கையில் அவ்வூருக்கு ஒரு முனிவர் வந்தார். அவரிடம் அரசன் தன் விஷயத்தைக் கூறினான். அரசனுடைய மனத்தை மாற்றும்படி மந்திரி முதலானோர் முனிவரை வேண்டினர். முனிவரும் அங்ஙனமே செய்வதாகக் கூறிப் புது மண்பாண்டம் ஒன்றை வாங்கினார்; அரசனிருக்கும் தோட்டத்தை அடைந்தார். அரசன் பார்க்கும்படி அக்குடத்தால் கிணற்றினின்றும் நீர் முகந்தார்; முகந்து முனிவர் அங்கேயே அதனைக் கீழே எறிந்து உடைத்துப் பின் உட்கார்ந்து வருத்தப்படத் தொடங்கினார். "ஐயோ! என் புதுப்பானையே, உன்னைபோல் எனக்கு வேறொன்று கிடைத்தாலும், உனக்கு நிகராகுமா? உன்னுடைய அகன்ற வாயையும் அழகையும் என்று காண்பேன்!" என்று பலவாறு கூறிப் புலம்பினர்.

இவ்வாறு முனிவர் புலம்பியதைக்கேட்ட அரசன் அருகே வந்து 'பெரியீர்! நீர் இந்தப் பானைக்காக இப்படி வருந்தலாமா? போனது வருமா? இது போனால் வேறு பானையை வாங்கிக்கொள்ளக் கூடாதா? இப்படி இருக்க, நீர் வருந்துவானேன்?' என்று வினவினன்.

முனிவர், 'அரசனே, உண்மைதான்; நான் பானை உடைந்ததற்காக வருந்தவில்லை. உன் துன்பத்தைப் போக்கவே இப்படிச் செய்தேன். நீ எனக்குச் சொன்னவையெல்லாம் நீயே யோசித்துப்பார். மனைவியை இழந்ததால் இப்படி வருந்தி மெலிகின்றனையே! இதனால் அரச காரியங்களையும் மறந்தனையே! இனி இப்படி வருந்தாதே; போன காரியத்தைக் குறித்து கவலைப்படாதே. உன்காரியத்தைக் கவனி' என்று கூறினான். அரசனும் உண்மையை உணர்ந்து முன்போலவே அரசாண்டு வந்தான்.

இக்கதையினால் நாம் அறிவதென்ன? போனதைக்குறித்து வருந்துதல் கூடாது. இனி நாம் என்ன செய்யவேண்டும் என்பதைக் குறித்துச் சிந்தித்து இழந்த பொருளை மீண்டும் பெறுவதற்கான முயற்சிகளைச் செய்ய வேண்டும். என்ன முயற்சி செய்தாலும் இழந்த அதைப் பெற இயலாது. அதைவிட்டு அதற்கு நிகரான வேறு பொருள்களைப் பெற முயற்சி செய்ய வேண்டும் என்பதாம்.

S. ரதிதேவி,
ஆறும் படிவம், 'ஏ' பிரிவு.

சங்க கால மதுரை நகர்

மதுரை என்றதும் நம் மனக்கண் முன் தோன்றுவது இரண்டு சின்னங்கள். ஒன்று கோயில்களுள் பிரசித்தி பெற்ற மீனாட்சியம்மன் கோவில். மற்றொன்று திருமலை நாயக்கர் மஹால் ஆகும். தமிழகத்து நாடுகளுள் ஒன்று பாண்டிய நாடு. அதன் தலைநகரம் மதுரை மாநகரம். அதனைக் கோ நகரமாகக் கொண்டு பாண்டியர் என்ற மரபினர் அந்த நாட்டை ஆண்டுவந்தனர். அக்கால மதுரையைப் பற்றி ஆராய்வோம்.

தென்னிந்தியாவில் சரித்திரப் புகழ்பெற்ற நகர்களுள் மதுரையும் ஒன்று. 'வான் பொய்ப்பினும் தான் பொய்யா வளமுடைய வைகை' நதி பாண்டிய நாட்டின் தலை நகரமாகிய இம் மதுரையை ஒட்டிப் பாய்ந்தது. வைகையாற்றின் இரு கரைகளிலும் சோலைகள் இருந்தன. அச் சோலைகளில் வானுற ஓங்கி வளர்ந்த பலவகை மரங்கள் குளிர்ச்சியை நல்கின. இத்தகைய சிறப்புடைய வைகை யாற்றினால் ஒயாவளம் பெற்றது மதுரை.

மதுரை மாநகரமானது அகன்ற வீதிகளும், வானளாவிய மாடமாளிகைகளும் நிரம்பப் பெற்றது. சிற்பம், ஓவியம், இசை முதலிய கலைகளின் உறைவிடமாயிருந்த ஓர் அழகிய நகர் அது. மதுரை மூதூர் காவற்காடு சூழப்பெற்றது. அதற்கப்பால் ஆழமான அகழி ஒன்று கோட்டையைச் சூழ்ந்திருந்தது. கோட்டை மதில் வானுற ஓங்கியது. அதன் மீது பலவகைப் போர்ப் பொறிகள் வைக்கப்பட்டிருந்தன. யவன வீரர்கள் கையில் வாளை ஏந்திக் கோட்டை மதில்வாயிலைக் காத்துவந்தனர்.

மதில் வாயிலைக் கடந்தவுடன் அகன்ற வீதிகளும், அவ்வீதிகளின் இருமருங்கிலும் பலவகைக் கடைகளும் இருந்தன. பொன், வெள்ளி வைரக் கடைகளும், பித்தளை, வெண்கலப் பாத்திரக் கடைகளும், ஜவுளிக் கடைகளும், மருந்துக் கடைகளும், எண்வகைத் தானியங்கள் விற்கும் கடைகளும், நவமணிகளான வைரம், மரகதம், மாணிக்கம், புஷ்பராகம், நீலம், கோமேதகம், வைடூரியம், முத்து, பவளம் போன்றவை விற்கும் கடைகளும், பூக்கடைகளும், தனித் தனியே தெருக்களின் இருமருங்கிலும் காணப்பட்டன.

மதுரை மாநகரில் சைவ, வைணவ, பௌத்த, சமண சமயங்களுக்குரிய ஆலயங்கள் இருந்தன. சிவன், திருமால் கோயில்களில் பலவகை வாத்தியங்கள் நாள்தோறும் ஒலித்தன. ஊரிலுள்ள மக்கள் அங்குச் சென்று கடவுளரை வழிபட்டனர்.

அரசனுடைய அரண்மனை நகரத்திற்கு நடு நாயகமாக விளங்கியது. அது மிக்க காவலை உடையதாக இருந்தது. அந்த அரண்மனை மிக்க அழகு வாய்ந்தது. அங்கு அரசனுடைய இருப்பிடம், மாதர்கள் வாழும் அந்தப்புரம், பலவகை அரங்குகள், அரசன் வீற்றிருக்கும் கொலுமண்டபம் முதலியன வானளாவி இருந்தன. நகரின் ஒரு பகுதியில் மா, பலா, வாழை போன்ற பழங்களையும், பாகல், வாழை, புடலை முதலிய காய்கறிகளையும், உருளை, சேனை போன்ற கிழங்கு வகைகளையும் ஏழைகட்குத் தானமாக அளிக்க அன்ன சத்திரங்கள் பல இருந்தன.

மதுரையில் தமிழின் வளர்ச்சி மிகவும் உன்னதமான நிலையை அடைந்திருந்தது. அங்குப் பாண்டியர்கள் தமிழ்ச் சங்கம் ஒன்றை ஏற்படுத்தித் தமிழைத் தம் உயிர்போலக் காத்தனர்; அதைக் கற்க ஆவலும் கொண்டனர்; அதைப் பாங்குறக் கற்றுச் சிறந்த புலவர்களாயும் விளங்கினர். இம் மதுரை மாநகர் என்றும் புகழுடன் விளங்கப் பல சிறந்த புலவர்களைக் கொண்டிருந்தது. இத்தகைய மதுரை மாநகர் எத்துறையிலும் சிறப்புற்றிருந்தது என்று கூறினால் மிகையாகாது.

இரவு வேளைகளில் வளமனை மகளிர் சிலர் ஆடல் பாடல்களிற் காலத்தைக் கழித்தனர். சிலர் கடவுள் வழிபாட்டில் ஈடுபட்டனர். சிலர் அற உபதேசங்களைக் கேட்டனர். பின்பு நள்ளிரவு நெருங்க யாவரும் உறங்கிவிடுவார்கள். ஆனால் நகரக் காவலர்கள் மட்டும் உறங்குவதில்லை. அவர்கள் தங்கள் கடமைகளை நெறிதவறாமல் செய்து வருவார்கள். மழை பொழிந்து தெருக்களில் நீர் ஓடினும் ஊர் சுற்றிவரும் இயல்பினர் அவர்கள். இவ்விதக் காவலர்களினால் மக்கள் அமைதியுடன் கள்வர் பயமின்றிக் கண்ணுறங்கினர்.

இத்தகைய சிறப்புடைய மதுரை மாநகர் சங்க காலத்தில் பாண்டியர் ஆட்சியின்கீழ் இருந்தது. கி. பி. 4-ஆம் நூற்றாண்டில் களப்பிரர் ஆட்சிக்கு உட்பட்டது. பின்பு கி. பி. 9-ஆம் நூற்றாண்டு வரை பாண்டியர் பாதுகாவலில் இருந்தது. பின்பு நான்கு நூற்றாண்டுகள் சோழர்களால் ஆளப்பட்டு வந்தது. கி. பி. 14-ஆம் நூற்றாண்டில் முஸ்லீம்கள் ஆட்சியில் இருந்தது. இறுதியில் ஆங்கிலேயர்களின் கைக்கு வந்தது. இன்றோ அஃது சுதந்திர வீரர்களாகிய நம் கையினில் உள்ளது.

கி. ஜானகி,
ஆறாம் படிவம், 'ஆ' பிரிவு.

ஊசியின் பெருமை

ஆராய்ந்தறியும் ஆற்றல் படைத்தவர்களே, அடியேனைப்பற்றி தாங்கள் அறிந்ததுண்டோ? என்னைக் கண்டவுடனேயே ஊசி என்று கூறி விடுவீர்கள். என்னைப் பற்றி நீவிர் நன்கு உணர்வீர். எனினும் என் வாயினால் என் சரிதையைக் கூறினால் தான் என் மனத்தினின்றும் பெரும்பாரம் இறங்கியது போலாகும். தற்புகழ்ச்சி கூடாதெனினும் "எய்தற்கரிய இயைந்தக்கால் அந்நிலையே செய்தற்கரிய செயல்" என்பதை நீவிர் அறியீரோ? அதன்படி என் வெகுநாளைய ஆசை பூர்த்தியாகிறதென்றால் அத்தகைய சந்தர்ப்பத்தைக் கைவிடுவேனா? எனது சரிதையைக் குறித்து நன்கு தெளிவுபட எடுத்துக்கூற அறியாவிடினும் எனக்குத் தெரிந்த அளவில் கூறுகின்றேன்.

நுண்ணறிவு படைத்தவர்களே, உங்கள் வாழ்வு ஓரே இடத்தில் நிலையானது. ஆனால் என் நிலையோ செல்வம் போன்று நிலையற்றது. ஓரிடத்தில் தோன்றி, வளர்ந்து, இறப்பது என்பது எனது அகராதியிலேயே கிடையாது. நான் தோன்றுவது ஓரிடம். செல்வது ஓரிடம். வாழ்வது ஓரிடம். அங்கிருந்து நான் பலர் கைக்குச் செல்லுகிறேன். எனது இந்நிலைக்கு வருந்தி இரங்குவோர் எவருமிலர்.

இப்பரந்த உலகத்தில் என்னைப் பல விதங்களில் பயன்படுத்துகிறார்கள். என்னைப் பல உருவங்களில் அமைத்து ஒவ்வொரு எண்ணும் பெயரும் சூட்டுகின்றனர். உங்களுக்கு என்னைப் போன்ற எண்ணுண்டோ? அல்லது என்னைப் போன்று பல பெயர்களுண்டோ? எனக்கு ஐந்து, ஆறு என்ற எண்கள் உண்டு. எனக்குத் தையல் ஊசி, குண்டூசி, மெஷின் ஊசி, இன்ஜெக்ஷன் ஊசி, புத்தகம் தைக்கும் ஊசி, கோணி ஊசி, கொண்டை ஊசி, கிராமபோன் ஊசி, சட்டைகளுக்கு உபயோகிக்கும் ஊசி, பூவேலை செய்யும் ஊசி, போன்ற பல பெயர்கள் உண்டு. எனது மெய் இரும்பும், மாங்கனீசும் சேர்ந்த கலவையான எஃகினால் ஆக்கப்பட்டது. என்னைப் பல விதங்களில் பயன்படுமாறு செய்த உங்களுக்கு நான் என்றும் கடமைப்பட்டிருக்கிறேன்.

நீவிர் ஆடைகளை அறிந்து வாங்குகிறீர்கள். அங்ஙனம் வாங்கி யாது பயன்? உமது விருப்பப்படி அதனை அமைத்துக்கொள்ள-

வேண்டுமென்றால் எனது உதவியை நாடித் தானே ஆக வேண்டும்! புதிய துணிகளைத் தைக்கவும், பழைய கிழிந்த துணிகளைச் சரிப்படுத்தவும் என்னைத்தானே அழைக்கின்றீர்கள்? ரயில் வண்டி புறப்படத் தயாராக இருக்கிறது. ஆனால் அதை ஓட்டும் சாரதி இல்லையெனில் யாது பயன்? அங்ஙனமே துணி, நூல், தைக்கப் போகும் மனிதர் முதலியன இருந்தும் நான் இல்லையானால் அவற்றால் பயன் என்ன? என்னை நீங்கள் எந்த நேரத்தில் அழைத்தாலும் நான் உதவத் தயாராக இருக்கின்றேன். கோணி போன்றவற்றைத் தைக்கவும், யான் பயன்படுகின்றேன். விளக்கு பிரகாசமாக எரிவதற்குத் தூண்டுகோல் இருத்தல் போன்று எனக்கும் தூண்டுகோலாக ஒருசிலர் இருக்கிறார்கள். அவர்களே தையல்காரர்களாவர். அவர்கள் எனது ஓர் அவதாரமான மிஷின் ஊசியை உபயோகிக்கிறார்கள். நானிருப்பதால் தான் அவர்கள் வாழ்வு நடைபெறுகிறது. மேலும் பெண்கள் தங்கள் வீட்டை அலங்கரிக்கப் பல அழகான பூக்கள் போடவும், நூலினால் பின்னவும் என்னை உபயோகிக்கிறார்கள். குளிர் காலங்களில் குளிரினின்றும் காத்துக்கொள்ள என் உதவியால் ஆக்கப்பட்ட சட்டைகளைத் தானே உபயோகிக்கிறீர்கள்? பந்தயங்களிலும் நான் உபயோகப்படுகிறேன். பரிசுகள் வழங்கவும் பயன்படுகிறேன்.

ஒருத்தி நயமாக நிந்திக்கிறாள் என்றால் அவளை 'வாழைப்பழத்தில் ஊசி குத்துவது போல் பேசுகிறாள்' என்று கூறுகிறார்கள். ஒருத்தி வம்புக்காரி என்றால் அவளது வாயை ஊசியைக் கொண்டு தைக்கவேண்டும் என்கிறார்கள். வகுப்பில் பிள்ளைகள் சத்தம் போட்டால் ஆசிரியர்கள் 'ஊசி கீழே விழுந்தால் சப்தம் கேட்கும் வண்ணம் அமைதியாக இருக்க வேண்டும்' என்கிறார்கள். இதுபோன்ற பல அரிய சந்தர்ப்பங்களில் என் பெயர் அடிபடுவதை நீவிர் காணலாம்.

இவைகளைத் தவிர மேலும் சில விஷயங்களிலே யான் பயன்படுகிறேன். சோதனைத் தாள்களில் நன்கு அழகாக நீவிர் எழுதிய விடைகளை ஒன்று சேர்த்து உமக்கு நிறைய பயனளிக்கும் வண்ணம் செய்வது யார்? நீவிர் படித்துணரும் புத்தகங்களை அவ்வமைப்பில் செய்வது யார்? பள்ளியில் உமது திறமையை மெச்சுவதற்கு, நீவிர் ஒழுங்காகவும், அழகாகவும், விரைவாகவும் கூடை, தட்டு முதலியன பிரப்பினால் பின்ன உபயோகப்படுவது யார்? நம் இந்தியாவிலிருந்து ஏற்றுமதியாகும் பொருட்களை கோணிப்பையில் போட்டுக்கட்டி அதனைத் தைக்க உபயோகப்படுவது யார்? பெண்களின் நெறித்த குழலை அழகுபடுத்தப் பயன்படுவது யார்? உங்கள் உடம்பு சரியில்லையென்றால் வைத்தியரிடம் சென்று சரிப்படுத்திக் கொள்கிறீர்களே, அச்சமயம் அவர் உங்களது உடலில் ஏதோ ஒன்றைக் குத்துகிறாரே; அது என்ன? இப்பொழுது பள்ளிக்கூடங்களில் நடைபெறும் மரவேலை (Fret work) க்குப் பயன் படுவது யார்?

இவ்வாறு என் ஜன்மம் பிறர்க்கு உதவி செய்யவே ஏற்பட்டிருக்கிறது. "நீருக்கு நுரையுண்டு நெல்லுக்குமியுண்டு" என்பது போல் என்னாலும் பல தீங்குகள் ஏற்படுவதாகச் சிலர் கூறுகின்றனர். அதற்கு என்னைக் கோபிப்பதில் யாது பயன்? அஃது என்னை உபயோகிப்பவரின் குற்றமே. அவர்கள் சிறிது அசட்டையாக என்னை உபயோகித்தால் நான் அவர்களைக் குத்திவிடுகிறேன். ஞாபகமறதியாக என்னை எங்கு வேண்டுமானாலும் போட்டு விட்டு என்னைக் கோபிப்பார்கள். அத்தருணத்தில் அவர்களின் பொறுமையின் அளவை ஒருவாறு நான் அறிந்து கொள்வேன். மற்றப் பொருட்களைப்போல் என்னை நினைத்த இடத்தில் வைக்க முடியாது. ஞாபகமாக ஒரு குறிப்பிட்ட இடத்திலேயே வைத்து எடுத்துக் கொள்ள வேண்டும். ஏனெனில் என் உருவம் சிறியது.

எனது கதையைக் கூறிக்கொண்டே போனால் அதற்கு முடிவே இல்லை. ஜாதி மத பேதமோ, பணக்காரர், ஏழை என்ற வேறுபாடுகளோ கிடையாது. இப்பொழுது எனக்கு அழைப்பு வந்திருக்கிறது. எனவே, சற்றுப் பொறுத்துக்கொள்ளுங்கள். அழைப்பிற்குச் சென்று மீண்டும் வந்து இன்னும் ஏதாவது சொல்கிறேன்.

க. ரமணி,
ஐந்தாம் படிவம், 'ஈ' பிரிவு.

எனது மைசூர்ப்பயணம்

உலகில் உள்ள சிறப்புடைய இடங்களுள் உயர்தனிச் சிறப்புடைய இடமாக மைசூர் மிளிர்கின்றது என அன்பர் சிலர் கூறக்கேட்டு அவ்விடத்தைக் காணுதல் வேண்டும் என்னும் பேரவா என் உள்ளத்தே தோன்றியது. அந்த ஆவா நாளுக்குநாள் மிகுந்து "மைசூர் தசராக் காட்சி"யைக் காணச்செல்ல வேண்டுமென உந்தியமையால், பெரியவர்களுடன் போக முற்பட்டேன்.

எனவே நாங்கள் புகைவண்டி நிலையத்திற்குச் சென்று அதற்குரிய அனுமதிச் சீட்டைப் பெற்று ரயிலில் சென்னையிலிருந்து பயணத்தைத் தொடங்கி, பங்களூருக்குச் சென்றேன். அங்கிருந்து மற்றொரு ரயிலில் மைசூரை நோக்கிச் சென்றேன்.

நான் ஏறிய புகைவண்டி பங்களூரை விட்டுப் புறப்பட்டவுடன் வெட்ட வெளியில் விரைந்து பாய்ந்தோடியது. தரையில் ஊர்ந்துச் செல்லும் புகைவண்டியில் பயணம் செய்தல் உள்ளத்திற்கு உவகை ஊட்டுவதாகும். புகைவண்டியில் உள்ள கண்ணாடிச் சாளரங்களின் வழியாக வெளியே நோக்கினால் முகிற் கூட்டங்கள் ஆங்காங்கே ஆகாயத்தில் மிதப்பதைக் காணலாம். ஆறுகளின் மீது அமைக்கப்பட்ட நீண்ட பாலத்தின் மீது புகைவண்டி செல்லுகையில் சிறிது அச்சமாக இருக்கிறது. தூரத்திலே தெரியும் மலைகள் நிழல்போல மேகத்திற்கு அருகில் இருப்பது போன்று தெரிகின்றது. ஆறுகள் வளைந்து வளைந்து ஓடும் காட்சியையும், காண்பதற்கு இனிமை நல்கும் படர்ந்த பசும் புல் காட்சிகளையும் காண உள்ளம் மகிழ்கின்றது. இவ்வாறே இயற்கையன்னையின் பல காட்சிகளைக்கண்டு இன்புற்ற பின்னர் காலை 6 மணிக்கு மைசூரை அடைந்தேன்.

மைசூர் ஒரு சிறு ராஜ்யமாகும். மைசூரில் நாகரிகங்கள் அனைத்தும் கலந்து உறவாடுவதைக் கண்டு இன்புற்றேன். உலகில் உள்ள பல்வேறு இனத்தவரும் அங்கு வாழ்கின்றனர். கடின உழைப்பிற்குரிய தொழில்களில் தமிழரும், அவ்வூர் மக்களும் வருந்தி உழைக்கின்றனர். இதைச் செயற்கை எழில் செறிந்த ராஜ்யம் எனலாம். அன்று இரவு அரசர் பொதுமக்கள் காண விஜயம் செய்வார் எனவும் அதற்கான பல நிகழ்ச்சிகள் நடைபெறும் எனவும் அறிந்தவுடன் அக்காட்சிகளை எல்லாம் கண்டு களித்தேன்.

பின்னர் நகரை விட்டுச் சோலைகளின் ஊடே புகுந்தேன். எங்கும் பசுமைதான். உயர்ந்த மரங்கள். மரங்களில் பெரும்பாலும் சந்தன மரங்களே ஆகும். சிற்சில இடங்களில் நெல் விளைவதையும் கண்டேன். எந்தப் பயிருக்கும் தண்ணீர் பாய்ச்சவேண்டும் என்ற தேவையே அங்கு இல்லை. இயற்கை அன்னைவான் வழி நீர்ப்பெருக்கை நல்கிக்கொண்டே இருக்கிறாள். வழி நெடுகப் பசுஞ் சோலைகளுக்கு இடையே சிறு வீடுகளும், சிற்றூர்களும் காணப்பட்டன. மேலே சென்றேன். ஒரு நீண்ட மலைத்தொடர் சமீபத்தில் தெரிந்தது. அது "சாமுண்டீசுவரிமலை" என அறிந்தேன். சாமுண்டீசுவரி தெய்வமானது மைசூர் அரசரின் குல தெய்வம் எனச் சிலர் கூறக் கேட்டேன். நானும் அம்மலைக்குச் சென்றேன். சாமுண்டீசுவரியை அழகாக அலங்கரித்திருந்தனர். அம்மலையின் மீதே அரசர் தங்குவதற்கான ஒரு சிறிய அரண்மனை மிக அழகாகக் காட்சி அளித்தது. இவ்வாறாக இயற்கையின் எழில் வளத்தைக் கண்டுகளித்து மலையினின்று கீழே இறங்கினோம்.

பின்னர் பகல் 4 மணிக்குக் கண்ணம்பாடி என்னும் நீர்த்தேக்கத்தைக் காணச் சென்றோம். இவ்வணைக் கட்டுத்தான் கிருஷ்ணராஜ சாகரம். இவ்வணை காலம் சென்ற மைசூர் மன்னர் கிருஷ்ண ராஜேந்திர உடையார் காலத்தில் அவர் ஆதரவினால் 1911-ஆம் ஆண்டு துவக்கப் பெற்று பதினாறு ஆண்டுகளில் முடிக்கப்பட்டது. இத்தகைய ஒரு பெரிய திட்டத்தை ஏற்றுத் திறம்பட முடித்து மைசூர் நாட்டின் உணவு வளத்தைப் பெருக்கிய அரசர் பெயராலேயே இந்நீர்த்தேக்கம் கிருஷ்ண ராஜ சாகரம் என வழங்கப்படுகிறது.

இவ்வணை 8,600 அடி நீளமும் 130 அடி உயரமும் உடையது. இது முற்றிலும் கற்களாலேயும் சிமெண்டினாலேயும் கட்டப்பட்டுள்ளது. இவ்வணையின் உச்சியில் அழகிய கைப்பிடிச் சுவரும் மின்சார விளக்குகள் அமைந்த சாலையும் உள்ளன. இவ்வணையின் இடை இடையே மின்சாரத்தால் இயக்கக் கூடிய பெரிய கதவுகளைக்கொண்ட மதகுகள்

உள்ளன. இம் மதகுகளின் மூலம் காவிரி நீர் விரைவுடன் பாய்ந்து ஓடும் காட்சி அழகானதாகும். அணையின் முன்புறத்தில் காவிரி அன்னையின் அழகிய சிலை ஒன்றை நிறுவியுள்ளனர். அம்மை தன் கரத்தால் காவிரி நீரை அள்ளி மக்கட்கு வழங்குவதுபோல் இச்சிலை அமைக்கப்பட்டுள்ளது. நீர்த்தேக்கத்தில் உள்ள காவிரி நீர் அணையை ஊடுருவிக் கொண்டுவந்து காவிரி அன்னையின் கரங்களிலிருந்து எப்பொழுதும் பெருகிக் கொண்டே இருக்குமாறு அமைக்கப்பட்டிருப்பது மிகவும் வியப்பினை அளிப்பதாகும்.

காலை வானின் நீல நிற வனப்பும், அந்தி வானின் சென்னிறக் காட்சியும் கண்ணைக் கவர்வன. மழைநீர் அருவியாக ஓடும் அழகும் அவ்வருவிகள் ஆறாகப் பெருகிப் பசுமை வளம் பெருக்கும் பொற்பும், எல்லா இடங்களிலும் பச்சைப் பசேல் எனப் பெருங்காட்சி நல்கும் இயற்கை–செயற்கைப் பொழில்களும் கண்டு இன்புறத் தக்கன. வானுற ஓங்கி வளர்ந்து நிற்கும் மரங்களும் அவற்றினைக் கொழு கொம்பாகக் கொண்டு பிணைந்து கிடக்கும் கொடிகளும் இப் பசுமையினூடே காணப்படும் பலநிற மலர்களும் அந் நாட்டினைக் காண்போர் உள்ளத்தைக் கொள்ளை கொள்வனவாகும். இவ்வாறாக இயற்கைக் காட்சிகளைக் கண்டு களித்துச் சென்னை திரும்பினேன்.

R. ஸரஸ்வதி,
ஐந்தாம் படிவம், 'இ' பிரிவு.

அகர வரிசையில் கல்வி

அருளைத் தருவது கல்வி
ஆக்கம் அளிப்பது கல்வி
இன்பம் பயப்பது கல்வி
ஈகை வளர்ப்பது கல்வி
உயர்வு தருவது கல்வி
ஊக்கம் அளிப்பது கல்வி
எழுச்சி தருவது கல்வி

ஏற்றம் அளிப்பது கல்வி
ஐயம் தீர்ப்பது கல்வி
ஒற்றுமை வளர்ப்பது கல்வி
ஓங்கச் செய்வது கல்வி
ஔடதம் ஆவது கல்வி
எஃது வலிமை தருவதும் கல்வியே.

T. A. சரோஜா,
ஆறாம் படிவம், 'ஆ' பிரிவு.

மறைந்திருக்கும் ஊர்

(கீழே காணப்படும் ஒவ்வொரு வாக்கியத்திலும் ஓர் இடத்தின் பெயர் மறைந்திருக்கிறது. கவனித்துத் தெரிந்து கொள்ளுங்கள்)

1. பளிங்குக் கல் கத்தாழைக்கு அருகில் இருக்கிறது.
2. கம்பர் மாபெரும் கவி.
3. விமலா கூர்மையான கத்தி வைத்திருந்தாள்.
4. அந்தக் கள்ளி கோட்டையினுள்ளே நுழைந்தாள்.
5. சிவசிவ! காசிக்குப் போனாலும் கருமம் தொலையாது.
6. அவனுடைய நிஜார் காக்கி; நாடா பச்சை.
7. 'குடகுட' என்று குடத்தினுள் நீர் புகுந்தது.

G. தங்கம்,
ஐந்தாம் படிவம், 'உ' பிரிவு.

(விடை 26-ம் பக்கம் பார்க்கவும்)

புதிர் மொழிகள்

1. ஓரெழுத்தாற் சோலை சொலும், இரண்டாம் எழுத்தும் சேர்ந்தால் ஒரு நிறத்தினைக் குறிக்கும், மூன்றும் எழுத்துச் சேர்ந்தால் ஒரு புண்ணிய நதியினைக் குறிக்கும், அஃதென்ன?

2. மூன்றெழுத்துக்களும் நின்றால் ஒரு நகரத்தைக் குறிக்கும், கடையெழுத்து சுருங்கின் ஒரு பானத்தின் பெயராகும், முதலெழுத்து சுருங்கின் ஒரு பிரபுவைக் குறிக்கும், அஃதென்ன?

3. நக்ஷத்திரங்களுக்குள் ஒன்றின் பெயர். முதலெழுத்தைத் தள்ளினால் அலை என்று பொருள் படும், நடுவெழுத்தை எடுத்தால் மதிலைக் குறிக்கும். கடையெழுத்தை எடுத்தால் கடவுளைச் சுட்டும். அஃதென்ன?

4. தூது, மதுரை, துவரை, இம்மூன்று சொற்களின் கடை, நடு, முதல் இவற்றைக் கூட்ட அது பல்லை ஒக்கும். அஃதென்ன?

5. மூன்றெழுத்தும் நின்றால் இவ்வுயர்ந்த உலகத்தைக் குறிக்கும், கடையெழுத்துச் சுருங்கின் இந்தியாவின் ஓர் புண்ணியஸ்தலம்.

A. தங்கம்,
ஐந்தாம் படிவம், 'அ' பிரிவு.

(விடை 26-ம் பக்கம் பார்க்கவும்)

தமாஷ் பேச்சு

பையன்: செய்யாத காரியத்திற்காக ஒருவனைத் தண்டிக்கலாமா சார்!

ஆசிரியர்: கூடாது அப்பா! அது பெரிய பாபம்.

பையன்: அதுதான் சொல்லுகிறேன். நான் இன்றைக்கு வீட்டுக் கணக்குச் செய்யவில்லை சார்!

ஆசிரியர்: ? ? ? ? ?

* * * *

ஆசிரியர்: கோமதி! 'உனக்கு கணக்குத் தவறாக வருகிறது' என்பது எந்தக் காலத்தைக் குறிக்கிறது.

கோமதி: என் கஷ்டகாலத்தைக் குறிக்கிறது.

* * * *

முருகன்: கந்தா, எனக்குக் கணக்குப் பரீக்ஷையில் முதலில் 25, அப்புறம் 35, கடைசியில் 40 ஆக மொத்தம் 100 ஆகிறது.

கந்தன்: எனக்கும் அப்படித்தான். முதலில் 1; அப்புறம் பூஜ்யம்; கடைசியிலும் பூஜ்யம். மொத்தம் 100 ஆகிறது.

C H ரமீலா,
மூன்றும் படிவம் 'ஆ' பிரிவு.

* * * *

சீனு: டேய் கோபு! உங்க வீட்டு விலாசம் என்னடா; நாளை உன் வீட்டிற்கு வருகிறேன்.

கோபு: நாளைக்கு வருவாயல்லவா? அப்பொழுது பார்த்துக்கொள் வீட்டின் விலாசத்தை.

R. சரஸ்வதி,
ஐந்தாம் படிவம், 'இ' பிரிவு.

विद्यार्थी जीवन

विद्या का अर्थ है किसी वस्तु के गुणों को अच्छी तरह जानना। जो लडका विद्या प्राप्त करता है वह विद्यार्थी कहलाता है। विद्यार्थी वह है जो किसी चरित्रवान व्यक्ति के अच्छे विषयों को सीखता है। सेवा का भाव हमेशा मन में रखना है। जो अहंकार में फूला रहता है, वह कभी कुछ सीख नहीं सकता। विद्यार्थी को हंस पक्षी की तरह अच्छे गुण को लेकर अवगुण को छोड देना चाहिए। जो जितना ही विनम्र, आज्ञानुकारी हो और स्थिर स्वभाव का हो, वह उतना ही अधिक ज्ञान प्राप्त कर सकता है। विद्यार्थी को शान्त चित्त से अपने आचार्य के सदुपदेशों को सुनना चाहिए और खूब मनन करना चाहिए। अपने मन को संयमित और नियंत्रित रखना चाहिए। दिल और दिमाग को नयी चीजों की विशेषताओं को जानने के लिए हमेशा खुला रखना चाहिए। विद्यार्थी को मेहनत व मशक्कत से घबडना नहीं चाहिए। पढने लिखने में लगन निष्ठा और बडों के प्रति सम्मान की भावना होनी चाहिए।

विद्यार्थी को सचाई और सादगी पर अधिक ध्यान देना चाहिए। स्वच्छता व पवित्रता उसके जीवन में कूट कूटकर भरी रहनी चाहिए। उसे स्वावलंबी बनना चाहिए। केवल मानसिक ही नहीं बल्कि शारीरिक कार्य भी करना चाहिए।

खुद भोजन बनाकर खाना, कपडे खुद साफ़ करना, व्यायाम करना और नित्यप्रति अपने सबक याद करना, उसका फ़र्ज़ होना चाहिए। विद्याथी को तडके उठकर दांत साफ़ करना व नहाना चाहिए। कपडे लत्ते फैशन की दृष्टि से न पहनकर, शरीर की हिफ़ाज़त की दृष्टि से पहनने चाहिए।

जो विद्यार्थी स्वस्थ रहता है उसका मन भी पढने लिखने में खूब लगता है और वह दिन दूना रात चौगुना काम करता है। उसी को देखकर "होनहार बिरवान के होते चीकने पात" कहा जाता है।

जो विद्यार्थी अपने कर्तव्यों को करने की कोशिश करता है, वह खुद अपने समाज और देश का बडा उपकारी होता है। दुनियाँ में जितने भी महापुरुष पैदा हुए हैं। वे विद्यार्थी जीवन में बडे नियमित और संयमित रूप से रहते थे और महापुरुषों की जीवनियां पढा करते थे। उससे उन्हें नयी प्रेरणाएं व चेतनाएं मिली हैं और वे आगे बढ सके हैं। यदि हम महात्मा गांधी जी, विश्वकवि रवीन्द्र, कार्ल मार्क्स, मिल्टन, न्यूटन आदि के विद्यार्थी जीवन का पता लगावें तो हमें मालूम हो जायगा कि उन्हें आगे बढानेवाला उनका विद्यार्थी जीवन ही रहा। सच्चे विद्यार्थी समय का मूल्य जानकर उससे फायदा उठाते हैं।

विद्यार्थी को बुद्धिजीवी ही नहीं बल्कि श्रमजीवी भी बनना चाहिए। तभी सोने में सुगंधि होगी। वरना विद्यार्थी का अध्ययन अपूर्ण व अधूरा ही रहेगा। उसे छोटे से छोटे व बडे से बडे काम करने में आगा पीछा नहीं करना चाहिए और कोई झिझक या हिचक नहीं होनी चाहिए। यदि विद्यार्थी सच्चे व ईमानदार न हों तो देश की तरक्की संभव नहीं।

प्राचीन काल में एकलव्य नाम का एक आज्ञाकारी और सुशील विद्यार्थी था। जिसने गुरु दक्षिणा में अपने हाथ का अंगूठा दे दिया और दिखला दिया कि गुरु भक्ति के आगे हमें किसी वस्तु का मोह नहीं करना चाहिए। यह भक्ति, प्रेम, करुणा और शील आखिर कैसे उत्पन्न होती है? वह तो सत्संगति और मधुर स्वभाव तथा पवित्र आचरण के द्वारा ही आ सकती है। वातावरण स्वयं बनाया जाता है और अभ्यास धीरे धीरे लगन के साथ काम करने पर बढाया जा सकता है। इसलिए किसी विद्यार्थी को अपने जीवन की तकलीफ़ों और झंझटों से ऊबना नहीं चाहिए बल्कि उसके कारण ढूंढने की कोशिश करनी चाहिए और उन्हें दूर करना चाहिए। विद्यार्थी के हृदय में नये कार्य करने की उमंग होनी चाहिए। ऐसी कल्पना करें जिससे नयी स्फूर्ति पैदा हों। प्रकृति की सुन्दरता का निरीक्षण करके अपने जीवन व जगत से सुपरिचित होना चाहिए।

यदि कोई विद्यार्थी अपने जीवन की वास्तविक स्थितियों को न जानता, दुनिया की बातों की जानकारी न रखता और

दिन-रात किताबी कीडा बनकर रहता हो, उससे न तो उसकी भलाई होगी और न राष्ट्र की ही। अस्तु, विद्यार्थी को हर स्थिति से परिचित होकर फ़ायदा उठाना है।

संक्षेप में विद्यार्थी का आदर्श आसमान की तरह ऊंचा होना चाहिए, सिद्धान्त हिमालय की तरह अटल होना चाहिए। हृदय का भाव समुद्र की तरह अनंत और गंभीर होना चाहिए। बडों के प्रति श्रद्धा, निष्ठा होनी चाहिए और उसे भेद भाव को भूलकर अपने कर्तव्य में व्यस्त रहना चाहिए। उसे अपने पराये के पचडे में न पडकर सच्चा, आज्ञाकारी और सदाचारी बनना चाहिए।

के. त्रिपुरसुंदरी
V Form, D.

त्याग

पाषा उत्तर भारत की मशहूर गवयत्री थी। ऐसा कोई आदमी न था जो पाषा का नाम न जानता था। बच्चे, बुढे, रईस, गरीब जवान सब उसके गाने में मस्त थे। उसकी माँ बहुत बूढी हो गयी थी। माँ बेटी से बहुत प्रेम रखती थी। हमेशा बेटी को अपने पास से जरा भी छोडती न थी। पाषा भी माँ को बहुत प्यार करती थी। पाषा के बाप के गुजरे अभी तीन चार साल हो गये थे।

रहीम खाँ अब्दुल पाषा के उस्ताद थे। उनकी कोशिश से ही आज पाषा का नाम हर उत्तरवाले पहचानते हैं। खाँ अब्दुल शरीफ आदमी थे। उनकी यही इच्छा थी कि अपनी शिष्या खूब गायें और उसके गाने सुनकर लोग यह पूछ बैठें कि यह खाँ साहब की शिष्या है क्या? अपनी इच्छा की पूर्ति के लिए खाँ साहब दिन रात काम करने लगे। किसी प्रकार अल्लाह की मर्जी से उनकी आशा भी पूरी हो रही है।

उस दिन बंगाल देश के हर कोने में हो-हल्ला मचा हुआ था। वजह यह थी कि विजयादशमी के उत्सव लोग मना रहे थे। हर कहीं मेला हो रहा था। कालीजी के सामने सब गवैये अपनी होशियारी दिखा रहे थे। कुछ चुने हुए अच्छे गवैयों के नाम मेले के बीच में पढाये गये। उनमें बेगम पाषा का भी नाम था। अब पाषा की बारी आयी। वह पहले अपने गुरु खाँ साहब की याद करने लगी। फिर काली जी को प्रणाम करके गाना शुरु करने लगी। पाषा खूबसूरत लडकी थी। देखेनवाले उसपर मुग्ध होते थे। उस पर उसका गाना दुगना मीठा था। उसकी आवाज कोयल को भी हरानेवाली सुरीली थी। वह जिस जगह पर गा रही थी, वहाँ काली की मूर्ति थी। जिसके चारों ओर दीपक जल रहे थे। मानो (कमलिनी सूरज को देखकर हंसा रही हो। पाषा गाने में मस्त होकर गा रही थी। वह अपने को भूल गयी। उसकी आवाज़ और तम्बूरा की आवाज एक थी। उसमें फ़रक जानना मुश्किल हो गया था। वहाँ यह कह सकते हैं कि बंगाल के हर कोने से लोगों को उसकी आवाज खींच लायी। सभी वाह! वाह! कहने लगे। खाँ अब्दुल साहब का नाम सब लोगों के मुँह से निकल रहा था। ठीक रात के दस बजे पाषा अपना गाना बंद करके घर जाने को रवाना हुई।

पाषा "टाक्सी" से उतरकर सीधे दरवाजे के पास गयी। ताला लगा हुआ था। माँ से चाबी लेकर ताला खोलकर अंदर गयी। पीछे सब लोग आ रहे थे। घर के अंदर अंधेरा ही अंधेरा छाया हुआ था। पाषा बत्ती जलाने के लिए 'स्विटच बोर्ड' के पास अपना हाथ बढाने लगी। गलती से 'रेडियो प्लग' में उसने हाथ रख दिया। बस! 'क्रीच' एक आवाज आयी। पाषा अपने हाथ खींचती हुई आवाज करती हुई जमीन पर गिरी। सब लोग घबरा गये। किसी को बात समझ में न आयी। सब चिल्ला रहे थे। मगर किसी को यह न मालूम होता था कि आखिर क्या किया जाय? इतने में 'टाक्सी डरैवर' टार्च लेकर उधर दौड आया। उसने देखा कि पाषा बेहोश हो जमीन पर गिर गयी है। झट उसने बत्ती जलायी। पाषा की माँ जिस बेटी को अपनी जान से बढकर प्यार करती थी, उसे जमीन पर पडे देखकर जोर से रोने लगी। पाषा की एक उँगली जल गयी थी। उसी टाक्सी में पाषा को अस्पताल ले चले। वहाँ जाते ही सब लोग पहचान गये कि मशहूर गवयित्री पाषा को 'Electric Shock' हुआ है, और वह बेहोश हो अस्पताल आयी है।

पाषा को एक स्पेशल वार्ड में ले चले। अब उसके पास सिर्फ माता जी रहीं। डाक्टर साहब आये। पाषा की परीक्षा करके उन्होंने बताया कि पाषा की एक उँगली चली

गयी। उसे फिर वापस नहीं पा सकती। दूसरी बात यह है कि उसके बदन में अब ताकत नहीं है। वजह यह है कि उसके बदन में जितने खून थे सब 'Electric Shock' में चले गये। अगर उसको खून न दिलायेंगे तो उसका बचना मुश्किल है। माँ यह सुनते ही बहुत परेशां हुई। वह चिल्लाने लगीं—डाक्टर साहब! मैं अपना खून देती हूँ मेरी बेटी को बचाइये। डाक्टर ने कहा अच्छा हम आपके खून की परीक्षा करके देखेंगे अगर खून साफ न हों तो और किसी का ही खून देना पडेगा।

उसी वक्त पाषा की माँ को खून परीक्षा करने के लिए कमरे में ले गये। कुछ देर बाद डाक्टर का जवाब "नहीं" में था। अब बेचारी माँ क्या करेगी? डाक्टर साहब ने यह भी बता दिया कि और तीन घंटे के अंदर अगर पाषा को खून न दिलायें तो उसका बचना असंभव है। माँ को झट यह उपाय सूझी कि खाँ साहब शायद अपना खून दे सकते हैं। माँ ने उस्ताद को खबर भेजी। खबर आते ही वे दौड आये। पाषा को देखते ही उन्हें चक्कर आने लगा। वे चिल्लाने लगे। हाय! मेरी इच्छायें मिट्टी में मिल गयीं। अब मेरा नाम रोशन करनेवाला कोई न रहा। थोडी देर बाद उस्ताद साहब होश में आये। पाषा की माँ सब हाल बताने लगीं। खबर सुनते ही उस्ताद साहब खुश हुए उन्होंने डाक्टर से कहा—डाक्टर साहब मैं अपना खून दिलाऊंगा। किसी प्रकार पाषा की जिन्दगी को बचाइये।

खाँ अब्दुल साहब की 'खून परीक्षा' होने लगी। डाक्टर भी खुश दीखाते थे। डाक्टर के मुंह को पहचानकर खाँ साहब भी खुश हुए। अब उन्हें मालूम हो गया कि खून साफ है।

खाँ साहब के बदन से 'ट्यूब' द्वारा खून पाषा के बदन में जाने लगा। थोडी देर बाद पाषा कराहने लगी मगर दूसरी जान कमजोर होती जा रही थी। तीन चार घंटे के बाद पाषा अपनी आंखें खोली। बाजू में अपने उस्ताद की बेहोशी की हालत देखने ही—चिल्लाती हुई फिर बेहोश हो गयी। डाक्टर घबरा गये। झट उन्होंने एक इन्जक्षन दिया। पांच मिनिट के बाद पाषा रोने लगी।

खाँ साहब को दूसरे कमरे में ले गये।

दूसरे दिन पाषा की बेहोशी दूर हो गयी। अब उसे सब हाल मालूम हो गया। वह फूट फूटकर रोने लगी। खाँ साहब अभी थोडी ही देर में मरनेवाले हैं। उन्होंने पाषा को देखने की इच्छा प्रकट की। पाषा ने अपने उस्ताद के पैरों के पास प्रणाम किया। उन्होंने बताया, बहन! मैंने जिस इच्छा से तुझे गाना सिखाया उसे तू पूरा करती आ रही है। अल्लाह तुझे बहुत सालों तक जीवित रखें। मैं अभी बूढा हो गया हूँ। इसलिए मैं आशा करता हूँ कि तू हमेशा गाती रहे और मेरा नाम अमर रखें। हाँ मुझे अभी शान्ति मिली है कि संगीत की जिन्दगी "पाषा" बच गयी। झट बोलना बंद हुआ। पाषा और उसकी माँ दोनों फूट फूटकर रोने लगीं। संगीत की जिन्दगी बच गयी। मगर उसे दिलानेवाले?

एस. एम शारदा,
VI Form, A.

श्रीवेदव्यास:

"अचतुर्वदनो ब्रह्मा द्विबाहुरपरो हरि:।
अफाललोचन: शम्भु: भगवान् बादरायण:॥"

इति अत्युक्तिं काचिदभियुक्तोक्तिमनुसरन् सर्वोत्कृष्टतया विराजतेस्म भगवान् श्रीवेदव्यास:। सकिल वेदान् विभजतेस्म तन्मूलंहि वेदानां चातुर्विध्यम्। पुराण, इतिहास, धर्मशास्त्रादींश्च प्रणिनाय।

'भारतं पञ्चमो वेद:' इति प्रथामापन्नं इतिहासरत्नं तदुपज्ञंखलु। तत्रहि साग्रलक्षं श्लोकानां संख्या चकास्ति। तन्मु-खेन भगवान् सर्वान् धर्मान्, सर्वानीती: राजधर्मान्, वर्णाश्रमधर्मान् आपद्धर्मान्, अन्यांश्च बहूपयुक्तान् विषयान् अस्मान् अवधारयति। तदन्तर्गताहि भगवती सकलतत्त्व-विद्याकप्राशिनी भगवद्गीता! यां किल पाश्चात्या अपि विद्वांस: अधुनाऽपि शिरसा श्लाघन्ते। सार्वजनीनं, सार्व-कालिकं च धर्मं अस्माकमुपदिष्टवते भगवते परमपुरुषाय सदातनीं नमस्कृतिं साञ्जलिबन्धां समर्पयाम:।

'अष्टादशपुराणानां कर्ता सत्यवतीसुत:।'

G. GANGA,
VI Form, B.

Telegrams : "ADVANCE" Telephone : 86396

SCIENTIFIC ADVANCE COMPANY

87, APPARSWAMI KOIL STREET,

MYLAPORE, MADRAS-4.

Post Box 616

Specialists in

Physical, Chemical and

Biological Apparatus and

Pure Chemicals and

Suppliers to the

NATIONAL HIGH SCHOOL FOR GIRLS & BOYS, TRIPLICANE.

Other Schools, Colleges, Universities,

Industrial and Research Laboratories

Throughout South India.

Printed by C. Krishnamurthi at the Ramakrishna Printing Works, 19/B, Woods Road, Madras-2. and Published by Sri N. K. Tirumalachariar at the National High School (Girls) Triplicane.

Editor : S. SAROJINI.